# 2

# தேசிய உற்பத்தியும் செலவினமும்

## 2.1 பொதுநோக்கு

**இலங்கையின் மொ.உ.உற்பத்தியானது 2011இல் உண்மை நியதிகளில் 8.3 சதவீதமான வரவேற்கத்தக்க விதத்தில் விரிவடைந்து, கடந்த ஆறு தசாப்த காலப்பகுதியிலேயே மிக உயர்ந்த வளர்ச்சி பதிவு செய்யப்பட்டமையினை எடுத்துக்காட்டியது.** இலங்கை அதன் பொருளாதார வரலாற்றில் தொடர்ந்து இரண்டாண்டுகளாக 8 சதவீதம் அல்லது அதற்குக் கூடுதலான பொருளாதார வளர்ச்சியை முதற்றடவையாகப் பெற்றமையின் காரணமாக இது முன்னெப்பொழுதுமில்லாத சாதனையாகக் கருதப்படுகிறது. இவ்வுயர் வளர்ச்சிக்கு, நிச்சயமற்ற உலகளாவிய பொருளாதார மீட்சிக்கிடையிலும் தூண்டுதலளிக்கும் பேரண்டப் பொருளாதாரச் சூழல், உறுதியான உள்நாட்டுக் கேள்வி, மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை, உட்கட்டமைப்பு வசதிகளிலான தொடர்ச்சியான விரிவாக்கம் மற்றும் முன்னேற்றமடைந்த வியாபாரம் செய்யும் சூழல் என்பன பக்கபலமாக இருந்தன. உற்பத்திப் பக்கத்தில், கைத்தொழில் மற்றும் பணிகள் துறையிலான கணிசமான வளர்ச்சி, இவ்வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்களவில் பங்களித்த அதேவேளையில், வேளாண்மைத் துறை பின்னடைவைச் சந்தித்தது.

**2011இன் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு, கைத்தொழில் மற்றும் பணிகள் துறையிலிருந்தான பங்களிப்பு குறிப்பிடக் கூடியளவில் இருந்தது.** கைத்தொழில் மற்றும் பணிகள் துறை முறையே 10.3 சதவீதத்தினாலும் 8.6 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்த அதேவேளையில், வேளாண்மைத் துறை 1.5 சதவீதத்தினால் மிதமாக வளர்ச்சியடைந்தது. கைத்தொழில் துறையானது, தயாரிப்பு, கட்டடவாக்கம், மின்வலு, சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் போன்ற பெரும்பாலான முக்கிய துறைகளிலான பாராட்டத்தக்க வளர்ச்சியுடன், உயர்ந்த வளர்ச்சியைக்கொண்ட துறையாகத் தோற்றம் பெற்றது. இது கடந்த 33 ஆண்டுகளில் அடையப்பட்ட கைத்தொழில் துறையிலான உயர்ந்த வளர்ச்சி வீதமாகும். மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், சுற்றுலா விடுதி மற்றும் உணவகங்கள் மற்றும் போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பூட்டல் துறைத் துறைகளின் செயலாற்றத்தினால் பெருமளவிற்கு உதவப்பட்டு, பணிகள் துறையானது 8.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, தனது செழிப்பான தன்மையைப் பேணிக் கொண்டது. வேளாண்மைத் துறையானது, கூடுதலான மழை மற்றும் அதனாலேற்பட்ட வெள்ளப் பெருக்கு நிலைமைகளினால் ஆண்டின் முதற்காலாண்டில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட போதும், எஞ்சிய காலப்பகுதியில் ஆண்டின் முதலரைப் பகுதியில் பதிவு செய்த 1.4 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து, 1.5 சதவீத ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்து மீட்சியடைந்தது. இதன்படி, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வேளாண்மையின் பங்கு 11.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்த அதேவேளை, கைத்தொழில் மற்றும் பணிகளின் பங்குகள் முறையே 29.3 சதவீதத்திற்கும் 59.5 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

**2011ஆம் ஆண்டுப் பகுதியில் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட கூட்டுக் கேள்வி உண்மை நியதிகளில் 2010இன் 9.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2011இல் 11.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டு நுகர்விலும் முதலீட்டு நடவடிக்கைகளிலும் ஏற்பட்ட விரிவே காரணமாகும்.** இவ் உள்நாட்டுக் கேள்வியில் காணப்பட்ட மிகை, ஏற்றுமதியின் 11 சதவீதமான மெதுவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த இறக்குமதிகளின் உயர்ந்த வளர்ச்சியினால் ஈடுசெய்யப்பட்டது. 2011இல் உள்நாட்டு நுகர்விலும் முதலீடுகளிலும் ஏற்பட்ட உண்மையான அதிகரிப்புக்கள் முறையே 13 சதவீதமாகவும் 7.7 சதவீதமாகவும் காணப்பட்டன.

**அட்டவணை 2.1** நிலையான (2002) விலைகளில் கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்

| துறை | மாற்று வீதம் (%) | | மாற்றங்களுக்கான பங்களிப்பு (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2010(அ) | 2011(ஆ) | 2010(அ) | 2011(ஆ) | 2010(அ) | 2011(ஆ) |
| வேளாண்மை | 7.0 | 1.5 | 10.4 | 2.2 | 11.9 | 11.2 |
| 1. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் காடாக்கல் | 6.4 | - 0.1 | 8.7 | - 0.1 | 10.7 | 9.9 |
| 1.1 தேயிலை | 13.8 | - 0.9 | 1.8 | - 0.1 | 1.1 | 1.0 |
| 1.2 இறப்பர் | 12.7 | 1.8 | 0.4 | 0.1 | 0.3 | 0.2 |
| 1.3 தெங்கு | - 14.3 | 3.0 | - 2.5 | 0.4 | 1.1 | 1.0 |
| 1.4 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 35.6 | - 19.0 | 2.0 | - 1.3 | 0.6 | 0.4 |
| 1.5 நெல் | 17.5 | - 8.4 | 3.7 | - 1.9 | 1.8 | 1.5 |
| 1.6 கால்நடை வளர்ப்பு | 2.9 | 7.3 | 0.3 | 0.7 | 0.8 | 0.8 |
| 1.7 ஏனைய உணவுப் பயிர்கள் | 4.4 | 2.5 | 2.1 | 1.2 | 3.8 | 3.6 |
| 1.8 பெருந்தோட்ட அபிவிருத்தி | 5.4 | 5.7 | 0.2 | 0.2 | 0.3 | 0.3 |
| 1.9 விறகு மற்றும் காடாக்கல் | 3.1 | 4.1 | 0.2 | 0.3 | 0.6 | 0.6 |
| 1.10 ஏனைய வேளாண்மைப் பயிர்கள் | 8.1 | 6.6 | 0.4 | 0.3 | 0.4 | 0.4 |
| 2. மீன்பிடி | 12.2 | 15.5 | 1.8 | 2.3 | 1.2 | 1.3 |
| கைத்தொழில் | 8.4 | 10.3 | 30.2 | 36.0 | 28.7 | 29.3 |
| 3. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 15.5 | 18.5 | 4.1 | 5.1 | 2.3 | 2.5 |
| 4. தயாரிப்புத்துறை | 7.3 | 7.9 | 16.0 | 16.6 | 17.3 | 17.3 |
| 4.1 பதனிடுதல் (தேயிலை,இறப்பர்,தெங்கு) | 5.8 | 0.9 | 0.4 | 0.1 | 0.6 | 0.6 |
| 4.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 7.5 | 8.3 | 14.8 | 15.7 | 15.7 | 15.7 |
| 4.3 குடிசைக் கைத்தொழில் | 5.5 | 7.0 | 0.7 | 0.9 | 1.1 | 1.0 |
| 5. மின்வலு வாயு மற்றும் நீர் | 8.0 | 9.2 | 2.4 | 2.7 | 2.4 | 2.4 |
| 5.1 மின்வலு | 8.2 | 9.6 | 2.2 | 2.5 | 2.1 | 2.2 |
| 5.2 வாயு | 7.3 | 5.7 | 0.2 | 0.1 | 0.2 | 0.2 |
| 5.3 நீர் | 4.5 | 6.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 6. கட்டடவாக்கம் | 9.3 | 14.2 | 7.7 | 11.6 | 6.7 | 7.1 |
| பணிகள் | 8.0 | 8.6 | 59.4 | 61.8 | 59.3 | 59.5 |
| 7. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 7.5 | 10.3 | 21.7 | 29.0 | 23.2 | 23.6 |
| 7.1 இறக்குமதி வர்த்தகம் | 9.3 | 14.3 | 9.3 | 14.0 | 8.1 | 8.5 |
| 7.2 ஏற்றுமதி வர்த்தகம் | 3.6 | 10.1 | 1.9 | 4.9 | 4.0 | 4.1 |
| 7.3 உள்நாட்டு வர்த்தகம் | 7.6 | 7.5 | 10.6 | 10.0 | 11.1 | 11.0 |
| 8. உணவகங்களும் விடுதிகளும் | 39.8 | 26.4 | 2.0 | 1.7 | 0.5 | 0.6 |
| 9. போக்குவரத்து, மற்றும் தொடர்பூட்டல் | 11.9 | 11.3 | 19.9 | 19.1 | 13.9 | 14.3 |
| 9.1 போக்குவரத்து | 11.4 | 11.3 | 15.7 | 15.6 | 11.5 | 11.8 |
| 9.2 சரக்குக் கையாளல் - துறைமுகங்களும் பயணிகள் வான்போக்குவரத்தும் | 16.8 | 7.2 | 1.4 | 0.6 | 0.7 | 0.7 |
| 9.3 அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் | 13.2 | 13.4 | 2.8 | 2.9 | 1.8 | 1.9 |
| 10. வங்கித்தொழில், காப்புறுதி, மற்றும் உண்மைச் சொத்துக்கள், ஏனையவை. | 7.5 | 7.9 | 8.4 | 8.4 | 8.9 | 8.8 |
| 11. வதிவிட சொத்துரிமை | 0.9 | 1.2 | 0.3 | 0.4 | 2.8 | 2.6 |
| 12. அரச பணிகள் | 5.4 | 1.2 | 5.3 | 1.2 | 7.6 | 7.1 |
| 13. தனியார் பணிகள் | 5.8 | 7.2 | 1.8 | 2.1 | 2.4 | 2.3 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 8.0 | 8.3 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் | - 16.6 | 4.3 | | | | |
| மொத்த தேசிய உற்பத்தி | 7.9 | 8.4 | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

உள்நாட்டு நுகர்வு, முதலீடு ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்புக்கள், பொருளாதாரத்தில் காணப்பட்ட தாழ்ந்த பணவீக்க அழுத்தம் மற்றும் 2011இல் தூண்டுதலளிக்கும் பேரண்டப் பொருளாதார சூழலில் காணப்பட்ட உயர்ந்த முதலீட்டாளர் நம்பிக்கை என்பனவற்றின் காரணமாக உண்மையான கொள்வனவு வலுவில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தன.

2011இல் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்துக்காக சீராக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி உண்மை நியதிகளில் 2010இன் 7.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் வழமை போன்று

வரைபடம் 2.1 ஆண்டு வளர்ச்சி வீதம்




எதிர்க்கணியமாக இருந்ததெனினும், உண்மை நியதிகளில் 4.3 சதவீதத்தினால் மேம்பட்டமையானது மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மொ.தே.உற்பத்தியில் உயர் வளர்ச்சியை தோற்றுவித்தமைக்கு 2011இற்கான சுருக்கியில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி, முன்னைய ஆண்டின் ரூ.271,346 உடன் ஒப்பிடுகையில் 2011இல் ரூ.313,511 இற்கு 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** சராசரியாக தலைக்குரிய வருமான வளர்ச்சி பணவீக்க அதிகரிப்பினை விஞ்சிக் காணப்பட்டதனால், வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றங்கள் காட்டப்பட்டன. ஐ.அ.டொலர் நியதிகளில், தலைக்குரிய மொ.உ.உற்பத்தி ஐ.அ.டொலர் 2,400 இருந்து ஐ.அ.டொலர் 2,836 இற்கு 18.2 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. ஐ.அ.டொலர் நியதிகளில் மொ.உ.உற்பத்தியில் உயர் அதிகரிப்பு ஏற்பட்டமையானது, ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் இவ்வாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபாவின் நாணயமாற்று வீதம் உறுதியாக இருந்தமை என்பனவற்றின் இணைந்த விளைவாகும்.

**செலவின முறையில், சந்தை விலைகளில் மொ.உ. உற்பத்தியை மதிப்பிடும் பொழுது முன்னைய ஆண்டின் 15.9 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2011இல் 16.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2010இன் ரூ.5,604 பில்லியனுடன் (ஐ.அ.டொலர் 49.6 பில்லியன்) ஒப்பிடும் போது 2011இல் ரூ.6,543 பில்லியன் (ஐ.அ.டொலர் 59.2 பில்லியன்) என மதிப்பிடப்பட்டது. இவ்வுயர்ந்த வீத அதிகரிப்பு, 8.3 சதவீதம் கொண்ட உண்மைப் பொருளாதார வளர்ச்சியினாலும் மொ.உ.உற்பத்தி சுருக்கியின் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தின் பொதுவான விலைமட்டத்தில் ஏற்பட்ட 7.8 சதவீத அதிகரிப்பினாலும் பிரதிபலிக்கப்பட்டது.

**2011இல் நுகர்வுச் செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையின் பின்னணியில், உள்நாட்டுச் சேமிப்புக்கள் வீழ்ச்சியடைந்தன.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, உள்நாட்டுச் சேமிப்புக்கள் 3.9 சதவீதப் புள்ளிகளினால் 15.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, அதிகரித்த நுகர்வோர் நம்பிக்கை மற்றும் குறைந்த சந்தை வட்டி வீதங்களினால் உந்தப்பட்டு தனியார் சேமிப்புக்கள் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தமையே பிரதான காரணமாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகரித்த நுகர்வுச் செலவினமும் அடக்கி வைத்திருந்த கேள்வியும் செலவினத்தின் பொதுவான அதிகரிப்பிற்குப் பங்களித்தன. இருப்பினும், அரசாங்கத்தின் குறைச் சேமிப்புக்கள், 2010இன் 2.1 சதவீதத்திலிருந்து 2011இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை ஊக்கமளிக்கக்கூடிய அபிவிருத்தியாகும். வெளிநாட்டு தேறிய காரணி வருமானம் வழமைபோல் பாதகமாக காணப்பட்ட போதிலும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25.1 சதவீத குறைந்த வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தேறிய தனியார் நடைமுறை மாற்றல்களின் 24 சதவீத அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் மிதமான முன்னேற்றம் என்பவற்றுக்கிடையிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 3.3 சதவீதப் புள்ளிகளினால் 22.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், 2011இல், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடுகள் 2.3 சதவீதப் புள்ளிகளினால் 29.9 சதவீதத்திற்கு அதிகரித்து, 7.8 சதவீதமான சேமிப்பு - முதலீட்டு இடைவெளியானது வெளிநாட்டுச் சேமிப்புக்கள் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளிலிருந்து நிதியிடப்பட்டதைப் பிரதிபலித்தது.

## 2.2 துறைவாரியான வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**வேளாண்மை உற்பத்திகளை குறிப்பாக பெரும்போக நெல் அறுவடையினையும் ஏனைய உணவுப் பயிர்களையும் எதிர்க்கணியமான முறையில் பாதித்த கடுமையான வானிலை நிலைமைகள் ஆண்டின் முதற்காலாண்டில் காணப்பட்ட போதும், வேளாண்மைத்துறையின் பெறுமதிகூட்டலானது முன்னைய ஆண்டின் 7 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மேலாக 2011இல் 1.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகளாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் சிறுபோக காலத்தில் நெல்லிலும் ஏனைய உணவுப் பயிர்களிலும் காணப்பட்ட அபரிமிதமான அறுவடை மற்றும் தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட மீட்சியுடன் ஆண்டு முழுவதிலும் மீன்பிடி மற்றும் விலங்கு வளர்ப்பில் காணப்பட்ட விரிவாக்கம் என்பன காணப்பட்டன. இவ்வாண்டில் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு முன்னைய ஆண்டின் உயர்ந்த தளமே முக்கிய காரணமாகவிருந்தது. மேலும், மொ.உ.உற்பத்தியில் வேளாண்மைத் துறையின் பங்கு 2010இன் 11.9 சதவீதத்திலிருந்து 2011இல் 11.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து மற்றைய இரண்டு துறைகளிலான உயர்ந்த செயலாற்றத்தினை எடுத்துக்காட்டியது.

**அட்டவணை 2.2 வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100) (அ)**

| விடயம் | 2010(ஆ) | 2011(இ) | மாற்றம் (%) 2010/2011 |
|---|---|---|---|
| வேளாண்மை, மீன்பிடி | 108.8 | 111.6 | 2.6 |
| 1 வேளாண்மை | 107.3 | 106.7 | -0.6 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 107.9 | 106.5 | -1.3 |
| தேயிலை | 106.4 | 105.5 | -0.8 |
| இறப்பர் | 114.0 | 117.7 | 3.2 |
| தெங்கு | 92.2 | 100.1 | 8.6 |
| நெல் | 115.0 | 103.6 | -9.9 |
| ஏனைய பயிர்கள் | 108.1 | 109.3 | 1.0 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 103.2 | 108.1 | 4.8 |
| 2 மீன்பிடி | 115.3 | 133.3 | 15.6 |

(அ) வருடாந்த உற்பத்தி சுட்டெண்ணின் அடிப்படை பெறுமதிக்காக பாவிக்கப்பட்ட சராசரிப் பெறுமதிகள் 1997-2000 இலிருந்து 2007-2010 இற்கு மாற்றப்பட்டது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## ஏற்றுமதிப் பயிர்கள்

**2011இல் மொத்த தேயிலை உற்பத்தி 2010இனைவிட 0.8 சதவீதத்தினால் சிறிதளவினால் வீழ்ச்சியடைந்து 328.6 மில்லியன் கி.கிறாம்களாக விளங்கியது.** முதல் இரண்டு மாதங்களிலும் மூன்று உயர வகைத் தேயிலையிலும் ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சிக்கு மிகையான மழை வானிலை நிலைமைகள் காரணமாகவிருந்த வேளையில் மத்திய மற்றும் உயர் நிலத் தேயிலைகளின் உற்பத்தி ஆண்டின் மூன்றாம் காலாண்டில் காணப்பட்ட வரண்ட வானிலை நிலைமைகளின் காரணமாக பாதிக்கப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் மத்தியநில வளர் தேயிலை உற்பத்தி 52.6 மில்லியன் கி.கிறாம்களுக்கு 6.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் உயர் நிலத் தேயிலை உற்பத்தியும் தாழ்நிலத் தேயிலை உற்பத்தியும் முறையே 0.2 சதவீதத்தினால் 79.3 மில்லியன் கி.கிறாம்களுக்கும் 0.3 சதவீதத்தினால் 196.7 மில்லியன் கி.கிறாம்களுக்கும் சிறிதளவால் அதிகரித்தன. ஏறத்தாழ 120,664 எக்டேயர் பரப்பளவை பயிர் செய்யும் நிலமாகக் கொண்டுள்ள சிறுஉடமையாளர் தேயிலை உற்பத்தி மொத்த தேயிலை உற்பத்தியில் 69 சதவீதத்திற்கு வகைகூறியது. 2011இல் பெருந்தோட்டத் துறையில் காணப்பட்ட மேல் நோக்கிய கூலித் திருத்தம் உற்பத்தியின் இலாபத்தினைக் குறைவடையச் செய்த போதும், முன்னர் தேயிலை சிறுஉடமையாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த வளமாக்கி உதவுதொகைத் திட்டம் பெருந்தோட்டத் துறைக்கும் விரிவாக்கப்பட்டமையானது பெருந்தோட்டக் கம்பனிகளின் உற்பத்திச் செலவு குறைவடைய உதவியது. மேலும் சாதகமான ஏற்றுமதி விலைகளும் இவ்வாண்டுப் பகுதியில் தேயிலைத் தயாரிப்பாளர்கள் சராசரி உற்பத்தி மட்டங்களை வலுவாகப் பேணுவதற்கு உதவின. இவ்வாண்டுப் பகுதியில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக இருந்தது யாதெனில் வெட்டிக் கிழித்து, சுருட்டப்பட்ட தேயிலை உற்பத்தி 5 மில்லியன் கி.கிறாம்களினால் 23.7 மில்லியன் கி.கிறாம்களுக்கு உயர்வடைந்தமையேயாகும். எனினும், நாட்டின் தேயிலை உற்பத்தியில் முக்கிய வகையாக விளங்கும் பாரம்பரிய கறுப்பு தேயிலை உற்பத்தி இவ்வாண்டுப் பகுதியில் 301.9 மில்லியன் கி.கிறாம்களுக்கு 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**கொழும்பு தேயிலை ஏலங்களில் அனைத்து உயர் வகைத் தேயிலைகளினதும் சராசரி விலைகள் 2010இல் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2011இன் முதற்காலாண்டில் உயர்வாக இருந்தபோதும் 2011இன் ஏனைய காலப்பகுதியில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தன.** கொழும்பு தேயிலை ஏலங்களில் அனைத்துத் தேயிலைகளினதும் ஆண்டுச் சராசரி விலைகள் 2010இன் கி.கிறாமொன்றிற்கான ரூ.371.54 உடன் ஒப்பிடுகையில் 2011இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.360.68இற்கு வீழ்ச்சியடைந்தன. 2011இன் முதற்காலாண்டிற்குப் பின்னர் ஏலங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா பிராந்தியங்களில் அரசியல் குழப்ப நிலைமைகள் வெடித்தமை என்பனவற்றுடன் மற்றைய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளின் தேயிலை வழங்கலில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் சேர்ந்து தேயிலைக்கான கேள்வியை மிதப்படுத்தியமையே காரணமாகும். எனினும், தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 2010இன் கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 4.40 இலிருந்து 2011இல் கி.கிறாமொன்றுக்கு ஐ.அ.டொலர் 4.60 இற்கு அதிகரித்தது.

**இறப்பர் உற்பத்தி முன்னைய ஆண்டினை விட 2011இல் 157.9 மில்லியன் கி.கிறாம்களுக்கு 3.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு சாதகமான வானிலை நிலைமைகளும், இவ்வாண்டுப் பகுதியில் இயற்கை இறப்பருக்கு கிடைத்த முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த விலைகளுமே முக்கிய காரணங்களாகும். பாலெடுக்கப்படுகின்ற இறப்பரின் மொத்தப் பரப்பளவு 101,720 எக்டேயர்களுக்கு ஏறத்தாழ 4 சதவீதத்தினால் அதிகரித்தது. 2011இல் புதிதாகப் பயிரிடப்படுகின்ற பரப்பளவு 1,534 எக்டேயர்களுக்கு 9 சதவீதத்தினாலும் அதிகரித்து உயர்ந்த விலைகளை உற்பத்தியாளர்கள் கவனத்தில் கொண்டமையை பிரதிபலித்தது. உற்பத்தியில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சிக்கு, அரசாங்கத்தின் வளமாக்கி உதவுதொகைத் திட்டத்தின் காரணமாக மேம்பட்ட வளமாக்கிப் பாவனை, இறப்பர் வளர்ப்போர் மழைத்தடுப்பிகளை அதிகளவில் பயன்படுத்தியமை மற்றும் அரசாங்கத்தின் விரிவாக்கப் பணிகளின் காரணமாக தொழிலாளர் உற்பத்தியாக்கம் மேம்பட்டமை போன்ற ஆற்றல் வாய்ந்த வேளாண்மை நடைமுறைகளே காரணமாகும்.

**2011இல் அனைத்து வகை இறப்பரினதும் சராசரி விலைகள் முன்னெப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த விலைகளைப் பதிவு செய்தன.** புகையூட்டப்பட்ட இறப்பர் (ஆர்எஸ்எஸ்) இல.1இன் ஆண்டுச் சராசரி விலை 2010 உடன் ஒப்பிடுகையில் கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.509 இற்கு 26 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் லேட்டெக்ஸ் கிறேப் இல. IXஇன் சராசரி விலை 2010 உடன் ஒப்பிடுகையில் ரூ.575 இற்கு 26 சதவீதத்தினால் அதிகரித்தது. இறப்பரின் எதிர்கால பேர விலைகளில் ஏற்பட்ட மிக உயர்ந்த

அதிகரிப்பு மற்றும் தோற்றம் பெற்று வரும் நாடுகளிலிருந்து தோன்றிய இயற்கை இறப்பருக்கான உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 2011இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இயற்கை இறப்பரின் விலைகள் முன்னெப்பொழுதுமில்லாத மட்டத்திற்கு உயர்வடைந்தன. எனினும், நான்காவது காலாண்டில் சீனா போன்ற முக்கிய வாங்குநர்களின் குறைந்த கேள்வி மற்றும் முக்கிய இயற்கை இறப்பர் உற்பத்தி நாடுகளின் மிகையான நிரம்பல்களுக்கு மத்தியில் கடுமையான வெள்ளத்தின் காரணமாக பாங்கொங் சந்தை மூழ்கிப் போனமை என்பனவற்றின் காரணமாக மிகக் கூடுதலான வீழ்ச்சியைக் காட்டின. இதன்படி, லேட்டெக்ஸ் கிறேப் இல. IX இன் சராசரி விலைகள் 2011இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் அடையப்பட்ட கி.கிறாமொன்றிற்கான ரூ.627 இலிருந்து இறுதிக் காலாண்டில் கி.கிறாமிற்கு ரூ.417 இற்கு வீழ்ச்சியடைந்தது. புகையூட்டப்பட்ட இறப்பர் (ஆர்எஸ்எஸ்) மற்றும் கழிவுக் கிறேப் போன்ற வகைகளின் விலைகளும் இதே போக்கிலேயே நகர்ந்தன.

**2010இல் கடுமையான வீழ்ச்சியைக் காட்டிய தெங்கு உற்பத்தி 2011இல் மீட்சியடைந்து 2,808 மில்லியன் காய்களுக்கு அதிகரித்து 8.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இதற்கு தெங்கு முக்கியமாக வளரும் பிரதேசங்களின் வானிலை நிலைமைகள் மேம்பட்டமையே முக்கிய காரணமாகும். எனினும், இவ்வாண்டுப் பகுதியில் உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தி 53,093 மெற்றிக்தொன்களுக்கு (392 மில்லியன் காய்களுக்கு சமமானது) 18.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு சமையல் எண்ணெய் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை 2010இன் ஆரம்பத்தில் கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இனாலும் அதைத் தொடர்ந்து 2010இன் பிற்பகுதியில் கி.கிறாமொன்றுக்கு ரூ.20 இனாலும் குறைக்கப்பட்டமையும் 2011இல் குறைந்த பன்னாட்டு சமையல் எண்ணெயின் விலைகளுமே காரணங்களாகும். இதன்படி இவ்வாண்டுப் பகுதியில் தாவர எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெயின் இறக்குமதிகள் 138,939 மெற்றிக்தொன்களுக்கு 79 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், 2011இல் தேங்காய்த் துருவல் உற்பத்தி முன்னைய ஆண்டினைவிட 46,620 மெற்றிக்தொன்களுக்கு (363.5 மில்லியன் காய்களுக்குச் சமமானது) 62 சதவீதத்தினால் அதிகரித்தது. தேங்காய்த்துருவல் கைத்தொழிலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு பன்னாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பும் சிறந்த ஏற்றுமதி விலைகளுமே பெரும் தூண்டுதலாக அமைந்தன. தேங்காய் களி மற்றும் பால்மா உற்பத்தியும் வரவேற்கத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டி, பெறுமதிகூட்டப்பட்ட தேங்காய் கைத்தொழில்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை பிரதிபலித்தது.

**2011இன் முதலரைப் பகுதியில் நிலவிய உயர்ந்த தேங்காய் விலைகள் அதிகரித்த உள்நாட்டு உற்பத்தியின் விளைவாக பின்னரைப் பகுதியில் குறைவடைந்தன.** முதலரைப் பகுதியில் தேங்காயின் மொத்த மற்றும் சில்லறை விற்பனை விலைகள், 2010இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் மோசமான அறுவடையின் காரணமாக முன்னெப்பொழுதுமில்லாத மட்டத்திற்கு உயர்வடைந்தன. 2011இன் முதலரைப் பகுதியில் காயொன்றிற்கு ரூ.37.64 ஆக நிலைபெற்றிருந்த தேங்காயின் சராசரி ஏல விலைகள் பின்னரைப் பகுதியில் காயொன்றிற்கு ரூ.31.75 இற்கு வீழ்ச்சியடைந்தன. இதேபோன்று, பின்னரைப் பகுதியின் தாழ்ந்த விலைகளின் போக்கு தேங்காய் எண்ணெய், உலர்த்திய தேங்காய் மற்றும் தேங்காய்த் துருவல் சந்தைகளிலும் அவதானிக்கப்பட்டன.

**ஏனைய ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி 2011இல் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது.** கறுவா உற்பத்தி 11 சதவீதத்தினால் அதிகரித்து அதிகரித்த ஏற்றுமதிக் கேள்வியின் காரணமாக கறுவாவும் கறுவா உற்பத்திகளும்

அட்டவணை 2.3 முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள

| வகைகள் | அலகு | 2010(அ) | 2011(ஆ) |
|---|---|---|---|
| 1. தேயிலை | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 331.4 | 328.6 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 222 | 222 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 186 | 185 |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 314.17 | 350.00 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 371.54 | 360.68 |
| - ஏற்றுமதிகள் (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 496.27 | 510.41 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,399 | 1,202 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 5 | 28 |
| 1.8 மொ.உ.உ.இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.6 | 1.3 |
| 2. இறப்பர் | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 152.9 | 157.9 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு (ஊ) | ‘000 எக்டேயர்கள் | 126 | 127 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | ‘000 எக்டேயர்கள் | 98 | 102 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 119.83 | 120.50 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 403.02 | 508.80 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 377.54 | 535.40 |
| 2.6 மீள்நடுகை (எ)) | எக்டேயர்கள் | 5,941 | 2,847 |
| 2.7 புதிய பயிரிடுகை (எ) | எக்டேயர்கள் | 1,413 | 1,534 |
| 2.8 மொ.உ.உவின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.0 | 1.2 |
| 3. தெங்கு | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 2,584 | 2,808 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 395 | 395 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 11.27 | 10.00 |
| 3.4 சராசரி விலை | | | |
| - உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 22.24 | 27.56 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (ஏ) | காய்க்கு ரூபா | 24.64 | 39.15 |
| 3.5 மீள்நடுகை / கீழ்பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 2,684 | 1,518 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 2,920 | 1,501 |
| 3.7 மொஉ.உ.வின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.4 | 1.4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2003இல் நடாத்தப்பட்ட இறப்பரின் நிலப்பரப்பு அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
(எ) இறப்பர் அபிவிருத்தித்தித் திணைக்களத்தின் பயிர்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஐ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத் திணைக்களம்
தெங்குப் பயர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
தெங்கு அபிவிருத்தி மற்றும் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

உயர்ந்த விலைகளைப் பெற்றுக் கொண்டமையினைப் பிரதிபலித்தது. அதிகரித்த வளமாக்கிப் பிரயோகங்கள், கடந்த சில ஆண்டுகளாக கறுவாவின் மீள்நடுகை மற்றும் புதிய பயிரிடுகையின் பெறுபேறாக முதிர்ச்சியடைந்த கறுவாவின் நிலப்பரப்பு அதிகரித்தமை என்பனவும் கறுவாவின் அதிகரித்த உற்பத்திக்கு காரணங்களாக அமைந்தன. 2005 இலிருந்து 2010 வரையான காலப்பகுதியில் கறுவாவின் பரப்பளவு 4,471 எக்டேயரினால் 30,522 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. மாறாக, மிளகு பயிரிடப்படும் முக்கியமான பிரதேசங்களில் பூப்பூக்கும் மற்றும் பழமாகும் காலப்பகுதியில் காணப்பட்ட மோசமான வானிலை நிலைமைகளின் பெருமளவு காரணமாக மிளகு உற்பத்தி 2011இல் 38 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உயர்ந்த ஏற்றுமதிக் கேள்வியின் காரணமாக கறுப்பு மிளகின் விலைகள் வீரியம் மிக்கனவாகக் காணப்பட்ட போதும் மிளகின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. 2011இல் கராம்பு உற்பத்தியும் 42 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. கராம்பின் விலை அதிகரித்தமைக்கு, குறைந்த நிரம்பலும் உயர்ந்த ஏற்றுமதிக் கேள்வியும் காரணங்களாக இருந்தன. கராம்பு உற்பத்தி முக்கியமாக, ஒரு வருடம் அபரிதமான உற்பத்தியையும் அடுத்து வரும் மற்றைய ஆண்டில் மோசமான அறுவடையையும் உற்பத்தி செய்கின்ற பூப்பூக்கும் மற்றும் பழுக்கும் இயற்கையான சுற்றுவட்டமொன்றில் தங்கியிருக்கிறது. மற்றைய பயிர்களிடையே ஏலக்காய், கொக்கோ மற்றும் புகையிலை உற்பத்திகள் முறையே 19 சதவீதத்தினாலும் 2 சதவீதத்தினாலும் 1 சதவீதத்தினாலும் அதிகரித்த வேளையில் சிற்றனெல்லா, சாதிக்காய் - சாதிப்பத்திரி உற்பத்தி என்பன முறையே 37 சதவீதத்தினாலும் 7 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. (இப் பயிர்களின் உற்பத்தி பற்றியதான தகவல்கள் புள்ளிவிபர பின்னிணைப்பில் அட்டவணை 14இல் தரப்பட்டுள்ளது)

## உள்நாட்டு வேளாண்மை

2011இல் மொத்த நெல் உற்பத்தி 2010 இனைவிட 3.87 மில்லியன் மெற்றிக்தொன்களுக்கு 10 சதவீதத்தினால் **வீழ்ச்சியடைந்தமைக்கு, 2011இன் சிறுபோகம் கடந்த ஐந்தாண்டுகளில் பதிவு செய்யப்பட்டவற்றில் மிக உயர்ந்த உற்பத்தியைப் பதிவு செய்த போதும் 2010/2011 பெரும்போக நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.** பெரும்போக நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, எந்தவொரு பருவக் காலப்பகுதியிலும் அறிவிக்கப்பட்ட பயிர்ச்செய்கைச் சேதங்களுக்குள் மிக உயர்ந்ததாக கருதப்படுகின்ற 2011 சனவரியிலும் பெப்புருவரியிலும் காணப்பட்ட வெள்ளத்தின் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள் காரணமாக இருந்தன. நேரடியான பயிர்ச்செய்கைச் சேதம் பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட பரப்பில் 25 சதவீதமாக (185,861 எக்டேயர்கள்) இருக்குமென மதிப்பிடப்பட்ட வேளையில் மறைமுக சேதம் விளைச்சலின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது. விளைச்சலானது 2009/10 பெரும்போகத்தின் எக்டேயரொன்றிற்கான 4,583 கி.கிறாம்களிலிருந்து எக்டேயர் ஒன்றிற்கு 3,668

வரைபடம் 2.2 அரிசி: நிரம்பல் மற்றும் கேள்வி




கி.கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டதுடன் மொத்த உற்பத்தியானது முன்னைய பெரும்போகத்திலான 2.629 மில்லியன் மெற்றிக்தொன்களுடன் ஒப்பிடுகையில் 1.996 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. வழமையாக மிகையான நெல் உற்பத்தி பிரதேசங்களாகக் கருதப்படும் மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, அம்பாறை, வவுனியா, பொலனறுவை மற்றும் அநுராதபுரம் என்பன வெள்ளத்தினால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டன. எனினும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய நிலங்கள் பயிர்செய்யப்பட்டமையின் விளைவாக (50,948 எக்டேயர்கள்) 2010/11 பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 2009/10 பெரும்போகத்தினை விட 730,050 எக்டேயர்களுக்கு 84,013 எக்டேயர்களினால் அதிகரித்தது.

**2011 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி ஏறத்தாழ 1.88 மில்லியன் மெற்றிக்தொன்களுக்கு ஏறத்தாழ 12.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இது கடந்த ஐந்தாண்டு சிறுபோக உற்பத்திகளின் சராசரியிலும் பார்க்க உயர்வானதாகும்.** பெரும்போகக் காலத்தில் ஏற்பட்ட உற்பத்தி இழப்புக்களை ஈடுசெய்யும் விதத்தில் சிறுபோகத்தில் உயர்ந்தளவு நிலப்பரப்பில் பயிர்செய்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் வசதிகளை வழங்கியது. நெற்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வெள்ளத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் சேதமடைந்த நிலங்களின் வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்களை மீள அட்டவணைப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், சாதகமான வானிலை நிலைமைகள், இப்பருவகாலத்தில் பயிர்ச்செய்கையின் பொருட்டு போதுமானளவிற்கு நீர் சரியான நேரத்தில் வழங்கப்பட்டமை, வளமாக்கி உதவி என்பன சிறுபோகத்தில் இலக்கிடப்பட்ட உற்பத்தி அடையப்படுவதனை உறுதிப்படுத்தின. சிறுபோக காலத்தில் அரசாங்கம் 75,172 மெற்றிக்தொன் நெல்லை (நாடு

**அட்டவணை 2.4** நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 2010(அ) | | | 2011(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 646 | 419 | 1,065 | 730 | 488 | 1,218 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 643 | 416 | 1,060 | 613 | 478 | 1,091 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 574 | 376 | 950 | 544 | 426 | 970 |
| உற்பத்தி | '000 மெ.தொ | 2,630 | 1,671 | 4,301 | 1,996 | 1,879 | 3,875 |
| | '000 புசல்கள் | 126,029 | 80,074 | 206,103 | 95,655 | 90,034 | 185,689 |
| விளைச்சல் (இ) | கி.கி/ எக்டேயர்கள் | 4,583 | 4,444 | 4,528 | 3,668 | 4,415 | 3,995 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில்லியன். | 1,402 | 1,139 | 2,541 | 2,340 | 1,958 | 4,298 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொ. | - | - | 126 | - | - | 28 |
| நெல்லிற்குச் சமமான இறக்குமதிகள் | '000 மெ.தொ. | - | - | 180 | - | - | 40 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது அதே வேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன்மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

கி.கிறாமொன்றிற்கு ரூ.28 ஆகவும் சம்பா கி.கிறாமொன்றிற்கு ரூ.30 ஆகவும்) நெல் சந்தைப்படுத்தல் அதிகாரசபையினூடாக கொள்வனவு செய்ததுடன் ஆண்டுப் பகுதியில் 109,000 மெற்றிக்தொன் நெல்லை சந்தைக்கு விடுவித்தது.

**2011 அநேக களப்பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு 2010/11 பெரும்போகத்தில் காணப்பட்ட மோசமான வானிலை நிலைமைகளின் தாக்கமே பெருமளவிற்கு காரணமாகும்.** 2010/11 பெரும்போகத்தில் குரக்கன், சோளம், பயறு, தட்டைப் பயறு, சோயா அவரை, உழுந்து, எள்ளு மற்றும் பச்சை மிளகாய் என்பனவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்த போதும் இது சிறுபோகத்தில் உயர்ந்த பண்ணை விலைகளினால் உதவப்பட்டு அதிகரித்த உற்பத்தியின் மூலம் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது (களப் பயிர்களின் உற்பத்தியும் நிலப்பரப்பும் புள்ளிவிபரப் பின்னிணைப்பு 18இல் தரப்பட்டுள்ளது). அதேவேளை, 2011இல் உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் உற்பத்தி 2010 உடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமைக்கு, வட மாகாணத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமையும் அறுவடைக் காலங்களில் அத்தகைய பொருட்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டமையும் உதவின. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளுக்கான உயர்ந்த கேள்வி மற்றும் இலாபகரமான விலைகள் என்பனவற்றால் உதவப்பட்டு பெரிய விதை வெங்காயத்தின் உள்நாட்டு உற்பத்தியும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. இஞ்சிக்கிழங்கு, மஞ்சள் என்பனவற்றின் உற்பத்தியும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு பயிர்ச்செய்கைப் பரப்பளவு அதிகரித்தமையும் ஏற்றுமதி வேளாண்மை திணைக்களத்தால் வழங்கப்பட்ட உதவியும் காரணங்களாகும். சோளம், பாசிப்பயறு, மற்றும் சின்ன வெங்காயம் போன்ற பல களப் பயிர்களின் இறக்குமதிகள் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இணையான விதத்தில் 2011இல் வீழ்ச்சியடைந்தன.

**2011இல் நாட்டின் மொத்த காய்கறி உற்பத்தி 2010இன் 855,994 மெற்றிக்தொன்களுடன் ஒப்பிடுகையில் 956,722 மெற்றிக்தொன்களுக்கு 11.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பின்னரைப் பகுதியில் காணப்பட்ட உயர்ந்த உற்பத்தியே காரணமாகும்.** இதற்கு 2011இன் முதலரைப் பகுதியில் பயிர் சேதமடைந்தமையின் காரணமாக அதிகரித்த காய்கறிகளின் விலைகளினால் வேளாண்மையாளர்கள் ஊக்குவிக்கப்பட்டமையும் அதன் பின்னர், பின்னரைப் பகுதியில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மையாளர் உதவி நிகழ்ச்சித்திட்டங்களும் காரணங்களாக அமைந்தன. காய்கறிச் செய்கை வேளாண்மையாளர்களுக்கு வளமாக்கி உதவுதொகை விரிவாக்கப்பட்டமை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வேளாண்மையாளர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் காய்கறிகளைப் பயிரிடுவதற்காக மார்ச்சில் வழங்கப்பட்ட விதை வசதிகள் மற்றும் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட "திவிநகும" நிகழ்ச்சித்திட்டம் போன்ற அரச உதவி நிகழ்ச்சித்திட்டங்களும் காய்கறிகளின் உற்பத்தி அதிகரிக்க உதவின. இது காய்கறிகளின் விலைகள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் யூனிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமையின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருந்தது. மேலும், வட மாகாணத்திலிருந்து குறிப்பாக யாழ் மாவட்டத்திலிருந்து கிடைத்த காய்கறிகளின் வழங்கலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் ஆண்டு முழுவதும் காய்கறிச் சந்தையில் விலை அழுத்தம் குறைவடைய உதவின.

**2011இல் சீனி உற்பத்தி 34,876 மெற்றிக்தொன்களுக்கு 11.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பெலவத்தை சீனி தொழிற்சாலையின் அதிகரித்த உற்பத்தியே பெருமளவிற்குக் காரணமாகும்.** சாதகமான வானிலை நிலைமைகள் காரணமாகவும் சிறு அளவு கரும்பு வளர்ப்போரின் பங்களிப்பினை அதிகரிக்கச் செய்த கரும்பின் உற்பத்தி விலை அதிகரிப்பும் இவ்வாண்டுப் பகுதியில் அதிகரித்த கரும்பு உற்பத்திக்கு காரணமாயின.

எனினும், பயிரிடல் காலப்பகுதியிலும் அறுவடைக் காலப்பகுதியிலும் பெலவத்தை தொழிற்சாலையினால் எதிர்நோக்கப்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையும் செவனகல தொழிற்சாலையில் கரும்பிலிருந்து சீனி பெறும் வீதம் வீழ்ச்சியடைந்தமையும் மொத்த சீனி உற்பத்தி இலக்கிடப்பட்ட மட்டத்திலும் பார்க்க குறைவாக அமைந்தமைக்கு காரணமாயின. 2011இன் உள்நாட்டு உற்பத்தி நாட்டின் வருடாந்த சீனித் தேவையில் 5 சதவீதத்தினை மட்டுமே பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. அதேநேரம் அரசாங்கத்தின் கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில், நாட்டில் கரும்பு பயிர்ச்செய்கையை விரிவாக்கும் பொருட்டு இவ்வாண்டுப் பகுதியில் சீனி ஆராய்ச்சி நிறுவனம் பல நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தது. கந்தளாய் சீனிக் கைத்தொழில்களின் ஒத்துழைப்புடன் சீனி ஆராய்ச்சி நிறுவனம் வேளாண்மையாளர்களுக்கு மேம்பட்ட பயிரிடல் கன்றுகளை வழங்குவதற்காக நாற்றுமேடையினை நிறுவியது. மேலும், சீனி ஆராய்ச்சி நிறுவனம் கரும்புப் பயிர்ச்செய்கைக்கு சாதகமாக காலநிலை நிலைமைகளைக் கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் கரும்பு பயிர்ச்செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காக அம்மாவட்டத்தில் நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது.

## மீன்பிடி

**2011இல் மொத்த மீன் உற்பத்தி 444,830 மெற்றிக்தொன்களுக்கு 15.6 சதவீதத்தினால் அதிகரித்தது.** இவ்வாண்டுப் பகுதியில் கடல் மீன் உற்பத்தி 385,270 மெற்றிக்தொன்களுக்கு 16 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் நன்னீர் மீன்பிடி உற்பத்தி 59,560 மெற்றிக்தொன்களுக்கு 13.6 சதவீதத்தினால் அதிகரித்தது. மிக உயர்ந்த வளர்ச்சி கரையோர மீன்பிடியுடன் ஒப்பிடுகையில் (9.8 சதவீதம்) கடல் மீன்பிடித் துறையிலுள்ள ஆழ்கடல் மீன்பிடியில் (25 சதவீதம்) காணப்பட்டது. 2011இல் சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக கிழக்கு மாகாணம் தவிர்ந்த அனைத்து மாகாணங்களும் மீன்பிடியில் அதிகரிப்புக்களைக் காட்டின. மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக கிழக்கு மாகாணத்தில் மீன்பிடி உற்பத்தி 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் மொத்த கடல் மீன்பிடி உற்பத்திக்கான அதன் பங்களிப்பும் 2010இன் 28 சதவீதத்திலிருந்து 2011இல் 23 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், வட மாகாணத்தின் மீன்பிடி 2011இல் 38 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து இம்மாகாணத்தில் மீன்பிடிக் கைத்தொழில் மக்களின் பங்களிப்பு அதிகரித்தமையினைப் பிரதிபலித்தது. எனினும், 2011இல் மொத்த கடல் மீன்பிடி உற்பத்தியில் வட மாகாணத்தின் ஒப்பீட்டு ரீதியான பங்களிப்பு 1983ஆம் ஆண்டின் 41 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 12 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. ஆகவே வட மாகாணத்திலுள்ள உற்பத்தியின் உள்ளார்ந்த வளங்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் மீன்பிடி சார்ந்த உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதுடன் சேர்த்து அம்மாகாணத்தில் மீன்பிடிச் சாதனங்களின் தொகுதியை

**அட்டவணை 2.5 மீன் உற்பத்தி**

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2010(அ) | 2011(ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 332 | 385 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 52 | 60 |
| மொத்தம் | 384 | 445 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறை

மூலம் : கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அமைச்சு

அதிகரிப்பது அவசியமாகும். அதேவேளை, நன்னீர் மீன்பிடித் துறையில் முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டமைக்கு இவ்வாண்டுப் பகுதியில் 44 மில்லியன் மீன் குஞ்சுகளும் 11 மில்லியன் நன்னீர் இறால்களும் விடப்பட்டமையே பெருமளவிற்குக் காரணமாகும். 2011ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மீன்களின் பெரிய வகைகளின் சில்லறை விலைகள் 2010இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் உயர்வாக இருந்தமைக்கு கிழக்கு மாகாணத்திலிருந்தான மீன் வழங்கல் வீழ்ச்சியடைந்தமை பெருமளவிற்குக் காரணமாக இருந்த வேளையில் சிறிய வகைகளின் விலைகள் ஆண்டு முழுவதும் ஓரளவு குறைவாக இருந்தமைக்கு தென் மற்றும் வடமேற்கு கரையோர மீன்பிடி மேம்பட்டமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

## விலங்கு வளர்ப்பு

**2011இல் மொத்த பால் உற்பத்தி 253.2 மில்லியன் லீற்றர்களுக்கு 2.3 சதவீதத்தினால் அதிகரித்தது.** பாசுப் பாலின் உற்பத்தி 198.4 மில்லியன் லீற்றர்களுக்கு 3.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் எருமைப்பால் உற்பத்தி 54.8 மில்லியன் லீற்றர்களுக்கு 1.4 சதவீதத்தினால் அதிகரித்தது. பசுப் பால் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பசுப் பாலின் சராசரி உற்பத்தியாளர் விலை லீற்றரொன்றிற்கு ரூ.33.20 இலிருந்து ரூ.50 இற்கு (கொழும்பு/ திண்ம கொழுப்பற்றது = 4.2/8.3) அதிகரித்தமை முக்கிய காரணமாகும். மேலும், அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்ட வடக்கு மற்கும் கிழக்கு மாகாணங்களிலான பாற்பண்ணைத் துறை அபிவிருத்தியுடன் நாட்டில் கறவைப் பசுக்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும் இக்குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு ஆதரவளித்தது. பால் சேகரிப்பு நிலையங்களும் அதேபோல் வழமையான பால் சேகரிப்பு நிலையங்களின் குளிரூட்டும் நிலையங்கள் விரிவடைந்தமையும் பாற்பண்ணை கைத்தொழில் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தின. அதேவேளை, மொத்த பால் உற்பத்திக்கான சிறிய பால் உற்பத்தி தயாரிப்பாளர்களின் பங்களிப்பு இவ்வாண்டில் மேலும் மேம்பாடடைந்து நாட்டின் பெறுமதி கூட்டப்பட்ட பால் உற்பத்திகளின் அதிகரிப்பிற்கு ஆதரவளித்தது. 2011இல் வட மாகாணத்தில் கறவைப் பசுக்களின் எண்ணிக்கையும் சராசரி நாளாந்த பால் சேகரிப்பும் கணிசமாக அதிகரித்து

சிறப்புக்குறிப்பு 5

## பாலில் தன்னிறைவினை அடைதல்

பாற்பண்ணைக் கைத்தொழில், பாரியளவிலான மற்றும் பாலினை சமத்துவமான தொழில் வாய்ப்புக்களை வழங்குவதில் அதிக உள்ளார்ந்த ஆற்றலுடையதாகும். மேலும் உயர்தரமுடைய புரதம், கனிமங்கள் மற்றும் ஊட்டச்சத்துக்களை வழங்குவதில் பால் பிரதான பங்கு வகிக்கின்றது. ஆகையால் பாலில் தன்னிறைவினை இலக்குப்படுத்தல் முக்கியமானதாகும். மேலும் பாலில் தன்னிறைவு அடைதல் உணவுப் பாதுகாப்பினை வழங்குகின்றது. கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு 2011இல் வெளியிட்ட அதனுடைய நடுத்தரக்காலத் திட்டமான பிரதான கால்நடைத் திட்டத்தில் 2015இன் இறுதியில் பாலில் தன்னிறைவு அடைவதற்கு திட்டமிட்டுள்ளது. இது ஒரு சவால்மிக்க இலக்காகும்.

பாலில் தன்னிறைவு என்பதனை இலக்கங்களுக்கு பரிமாற்றும் போது தற்போதைய பால் உற்பத்தியியான 253 மில்லியன் லீட்டரினை 2015இல் மூன்று மடங்குக்கு மேலாக 732 மில்லியன் லீட்டர்களாக அதிகரிக்கப்பட வேண்டும். இத் தன்னிறைவு மட்டமானது ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு சராசரி உணவு கொடுப்பனவு 100 மில்லி லீட்டர் என்ற இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் பெறப்பட்டதாகும்.

தற்போது சுமார் 78 சதவீதமான பால் உற்பத்தியானது பசுப் பாலாகக் காணப்படுவதுடன் மிகுதி எருமைப் பாலாகும். உள்நாட்டு உற்பத்தியானது மொத்த உள்நாட்டுப் பால் மற்றும் பால் உற்பத்திகளின் நுகர்வின் மூன்றில் ஒரு பகுதி மட்டுமேயாகும். மிகுதி ஐ.அ.டொலர் 251 மில்லியன் சராசரிச் செலவில் இறக்குமதி செய்யப்படுகின்றது. இது இறக்குமதிச் செலவில் சுமார் 1.8 சதவீதமாகும். இலங்கையில் தற்போதைய தலைக்குரிய பால் நுகர்வு ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும். ஒரு லீட்டர் பாலுக்கான பண்ணை விலை ஏறத்தாழ ரூ.50 ஆகக் காணப்படுவதுடன் ஒரு லீட்டருக்கான சராசரி உற்பத்திச் செலவு ரூ.27.86 என பதிவாகியுள்ளது.

கால்நடை புள்ளிவிபரத்தின்படி 2009இல் கால்நடை மற்றும் எருமை குடித்தொகை முறையே 1.19 மில்லியன் மற்றும் 0.41 மில்லியனாகும். சட்ட விரோதமான பால் விலங்குகள் கொல்லப்படுவது உட்பட ஆண்டுதோறும் கொல்லப்படும் பால் விலங்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் தற்போதைய கால்நடை குடித்தொகை வளர்ச்சி வீதம் எதிர்க்கணியமாகக் காணப்படுகின்றது. மலை நாடு, நடுத்தர நாடு, தெங்கு முக்கோணம், தாழ் நாட்டு ஈர வலயம் மற்றும் உலர் வலயம் ஆகிய ஐந்து பிரதான வேளாண்மைக் காலநிலை வலயங்களில் கால்நடை மற்றும் எருமை வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போதுள்ள மரபணு ஆற்றலின் மோசமான சுரண்டல், குறைந்தளவான உற்பத்தித்திறன், உயர்தர இனப்பெருக்கப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் அவற்றின் அதிகச் செலவுகள், உயர் கன்று இறப்பு, விரிவுபடுத்தல் முறைமையின் வேகமற்ற விரிவாக்கம், திறமையற்ற கால்நடை விரிவாக்கப் பணிகள், விவசாய அமைப்புக்களுக்கு உதவுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் இன்மை, களமட்டங்களில் பாலின் தரத்தினை பரிசோதிப்பதற்கான முறையான நியமங்களின் பற்றாக்குறை. பண்ணை சார்ந்த பால் பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் பற்றாக்குறை மற்றும் செயற்கை இனப்பெருக்க வசதிகளைப் பெறுவதிலுள்ள கஷ்டம் என்பன பாற்பண்ணை துறை எதிர்நோக்கப்படுகின்ற சில முக்கிய தடைகளாகும்.

கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் அதன் பிரதான கால்நடை திட்டத்தில் முன்மொழிந்த உபாய அணுகுமுறையில் ஒன்பது வியூகங்களை முன் வைத்துள்ளது. அந்த உபாயங்களின் நிலைப் பயன்பாடு, செயற்கை சினைப்படுத்தல் மற்றும் கன்று ஈனாத இளம் பசுக்களை ஒரு வணிக ரீதியான செயற்பாடாக உயர்த்துதல் ஆகிய நடவடிக்கைகளில் தனியார் துறையினை பலப்படுத்தல் போன்ற கொள்கை ரீதியான ஆதரவு, நோக்கத்தினை அடைவதற்கான வழிகளாகக் காணப்படுகின்றது. சுய நிர்வாக விவசாய சமூதாயங்களினூடாக பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளை வலுவூட்டுவதற்கான ஒரு சமூக உபாயம் முன்மொழியப்பட்டுள்ளது. துறையின் அபிவிருத்தி உபாயங்களில் பெரியளவிலான முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் உரிமை பரவலாக்குவதற்கானதும் ஓரளவு எந்திரமயமாக்கப்பட்ட வணிக அளவிலான பால் பண்ணையினை ஊக்குவிப்பதற்குமான உபாயங்கள் மூலம் தொலைவிலுள்ள பெறுபேறுகளையடைய முடியும். பரிந்துரைக்கப்பட்டது போல் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான புதிய தொழில்நுட்ப அறிமுகம் இலாபத்திற்கு வழிவகுத்து உற்பத்தி முறைமையின் நீடிப்பிற்கு வழிவகுக்கும். பிரதான கால்நடைத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது போன்று மாலை நேரப் பாலினை உறுதிப்படுத்தல் மற்றும் விஞ்ஞான ரீதியான பாற்பண்ணை முகாமைத்துவ பயிற்சியினை பராமரிப்பதனையும் இனியும் உதாசீனப்படுத்தக்கூடாது.

பால் விலங்குகளின் இருப்பினை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் கரு பண்ணைகளை ஸ்தாபிப்பதன் மூலம் இனப்பெருக்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவுவதற்கு தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், தனியார் கால்நடை இனப்பெருக்க பண்ணையாளர்களை ஊக்குவிப்பதற்கான கொள்கைகளும் கால்நடை பிரதான திட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது.

குறைந்த செலவில் ஆனால் தரமான விலங்கு உணவு உற்பத்தி செய்வது அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு பயனுள்ள விரிவாக்க சேவையினையும் நோய்க் கட்டுப்பாட்டு உபாயத்தினையும் கொண்டிருப்பதற்கு ஒவ்வொரு 150 பாற் பண்ணை குடும்ப கொத்தணிகளுக்கும் ஒரு கால்நடை அபிவிருத்தி பயிற்றுநர்/செயற்கை சினைப்படுத்தல் நிபுணரினை கொண்டிருப்பதனையும் ஒவ்வொரு 300 பாற் பண்ணை குடும்ப கொத்தணிகளுக்கும் ஒரு கால்நடை மருத்துவர், இரண்டு கால்நடை அபிவிருத்தி பயிற்றுநர். மற்றும் வேறு உதவிப் பணியாளர்களுடன் ஒரு மிருக வைத்திய அலகினை கொண்டிருப்பதனையும் பிரதான கால்நடைத் திட்டம் அடையாளப்படுத்துகின்றது. பயனாளர் உந்துதல் ஆய்வு, பால் தொழில்நுட்ப நிலையம் ஒன்றினை அமைத்தல் மற்றும் கால்நடைச் சேவைகளை வழங்குவதற்காக பாற் பண்ணையாளர்களை கவனம் செலுத்தும் நிறுவன ரீதியான அமைப்புக்கள் என்பன ஒட்டுமொத்த உபாயத்தினதும் அத்தியாவசிய உள்ளடக்கங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது, சிறிய பாற் பண்ணை விவசாயிகளையும் பெரியளவு பாற் பண்ணை முயற்சியாளர்களையும் உள்ளடக்கியதாக இத்துறைக்கு கடன் திட்டங்கள் காணப்படுகின்றன. உடன்பால் குடிக்கும் கலாச்சாரத்தினை அறிமுகப்படுத்தல் மற்றும் பால் சேகரிக்கும் இடங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதனூடாக பால் சந்தைப்படுத்தல் தொடரின் வினைத்திறனின்மைகளை நீக்குதலும் இந்த உபாய ஆவணத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டின் போது நடுத்தர கால பிரதான கால்நடைத் திட்டத்தினை காலாண்டு இலக்குகளுடன் கூடிய வருடாந்தத் திட்டமாக மாற்றுவதுடன் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் அவர்களுடைய இலக்குகளையும் அவ் இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகளையும் தெரியப்படுத்துவது விரும்பத்தக்கது. உதாரணமாக பாற் பண்ணை துறை இலக்குகளை அடைவதற்கு பாலிற்கான ஒரு பூரண தொலைநோக்கு பயனுடையதாக இருக்கும்.

பாலிற்கான தொலைநோக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் மீள்பரிசீலனை செய்யப்படுவதுடன், மாற்றியமைக்கவும்படலாம்.

ஆண்டுத் திட்டத்தில் ஐந்து வேளாண்மை காலநிலை வலயங்களிலுமிருந்து எதிர்பார்க்கப்படும் பால் உற்பத்தியினை அடையாளப்படுத்துவது அவசியமாகும். இது பகுத்தறிவான வள ஒதுக்கீட்டுக்கு அனுமதிக்கும். ஒவ்வொரு வேளாண்மை காலநிலை வலயத்திலும் கால்நடை மற்றும் எருமைக் குடித்தொகையினை அதன் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் இலக்குகளின் சரியான இணைப்புடன் மேற்பார்வை செய்வது திட்டமிடல் செயற்பாட்டின் பகுத்தறிவினைக் குறிக்கும். பாற்பண்ணை விவசாயிகள், பாற் பண்ணை கூட்டுறவு சங்கங்கள், பாற்பண்ணை பதனிடுபவர்கள் மற்றும் சந்தையாளர்கள் ஆகிய பாலிற்கான சந்தை தொடரினை பலப்படுத்துதவற்கான நடவடிக்கைகளை பாலிற்கான தொலைநோக்கு மேற்கொள்ளமுடியும். பாலிற்கான தொலைநோக்கு, இலக்குகளை அடைவதற்கான வழியிலுள்ளதா என்பது தொடர்பான பொது மற்றும் அடிக்கடியான அறிவிப்புக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளுதல் செயன்முறையினை சவாலானதாகவும் நம்பகமானதாகவும் வைத்திருக்கும்.

பால் விநியோக தொடரின் உள்ளடக்கங்களான பாற்பண்ணை விவசாயிகள், பாற்பணணை கூட்டுறவு சங்கங்கள், பதனிடுபவர்கள் மற்றும் பால் உற்பத்திகளை சந்தைப்படுத்துபவர்கள் ஆகியோர்களுக்கு மத்தியில் ஒரு பலமான பிணைப்பினை ஏற்படுத்துவதனூடாக பாற்பண்ணைத் துறையினை ஒரு வர்த்தகத் துறையாக ஆக்குவதிலேயே ஒரு இயக்கமான பாற்பண்ணைத் துறையின் நம்பகத்தன்மை தங்கியுள்ளது. ஆரம்பக் கட்டத்தில் உள்நாட்டு பாற்பண்ணைத் துறைக்கு குறிப்பாக இறக்குமதி செய்யப்பட்ட பாலின் வடிவம் (பால் மா) அளவு மற்றும் விலை என்பன வடிவிலான போட்டியினை எதிர்கொள்வதற்கு அரசாங்கக் கொள்கை ஆதவு தேவைப்படுகின்றது. கிடைக்கக்கூடிய தன்மை, தரத்திற்கான சரியான மதிப்பீடுகள் மற்றும் போட்டி விலையிடல் என்பனவற்றினூடாக சந்தைப்படுத்துபவர்கள் நுகர்வோர்களுடன் சரியான பிணைப்பினை கட்டியழுப்பினால் பாற்பண்ணைத் துறை போட்டிமிக்கதாகவும் நிலைத்து நிற்கக் கூடிய துறையாகவும் மாறும் ஆற்றல் உள்ளது. இது பாலில் தன்னிறைவினை கட்டியெழுப்புவதனை நோக்கிய ஒரு முன்னேற்பாடாக அமையும்.

உசாத்துணை

1. Dairy Co, Agriculture and Horticulture Development Board, Warwickshire. (2010) dairy roadmap. http://www.dairyco.org.uk

2. Ministry of Livestock and Rural Community Development. (2011) Livestock Master Plan, A Strategy for Livestock Development for self-sufficiency

3. Data Source: Department of Census and Statistics.

இம்மாகாணத்திலுள்ள போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பாரம்பரிய வாழ்வாதார முறைகள் வெற்றிகரமான முறையில் மீள நிறுவப்பட்டுள்ளமையினைப் பிரதிபலித்தன. எனினும், கிழக்கு மாகாணத்தின் செயற்பாடுகள் இவ்வாண்டின் ஆரம்பப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தின் தாக்கத்தினால் ஓரளவிற்கு பாதிக்கப்பட்டன. பாற்பண்ணைத் துறையில் சுய நிறைவை அடையும் இலக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் உள்நாட்டுப் பால் உற்பத்தி தேசத்தின் மொத்தப் பால் தேவைப்பாட்டின் சதவீதமாக 2010இன் 30 சதவீதத்திலிருந்து 2011இல் 32.5 சதவீதத்திற்கு (நாளொன்றிற்கு ஆளொருவருக்கு 100 மி.லீற்றர்) அதிகரித்தது. எனினும், இவ்வாண்டுப் பகுதியில் பால் மற்றும் பால் உற்பத்திகளின் இறக்குமதிகள் அதிகரித்துள்ளமையானது பாற்பண்ணை உற்பத்திகளுக்கான கேள்வியில் காணப்படும் அதிகரித்துச் செல்லும் போக்கினைப் பிரதிபலித்தது.

**அட்டவணை 2.6** கால்நடை வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்

| துணைத்துறை | 2010(அ) | 2011(ஆ) |
|---|---|---|
| 1. தேசிய விலங்கு (எண்ணிக்கை) (மில்) | 1.6 | 1.6 |
| கறவைப் பசுக்கள் | 1.2 | 1.2 |
| எருமைகள் | 0.4 | 0.4 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 247.6 | 253.3 |
| பசும்பால் | 191.9 | 198.4 |
| எருமைப்பால் | 55.6 | 54.8 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) | 17.8 | 18.9 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 32.48 | 50.00 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1,139.9 | 1,185.3 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி('000 மெ.தொ) | 104.16 | 116.76 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சு
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**இவ்வாண்டுப் பகுதியில், கோழி இறைச்சி உற்பத்தி 116,760 மெற்றிக்தொன்களுக்கு 12 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேளையில் முட்டை உற்பத்தி 1,185 மில்லியன்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தது.** கோழிப் பண்ணைச் சந்தையில் விலை உயர்வுகளைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளின் உற்பத்திகள் படிப்படியாக மேம்பாடடைய உதவின. சந்தையில் ஒரு நாள் கோழிக் குஞ்சுகளின் நிரம்பலில் காணப்பட்ட பற்றாக்குறையினை பூர்த்தி செய்வதற்காக தாய்ப் பறவையையும் ஒரு நாள் கோழிக்குஞ்சுகளையும் இறக்குமதி செய்யுமாறு தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினை அரசாங்கம் பணித்தது. இதற்கமைய, இவ்வாண்டுப் பகுதியில் முட்டையிடும் கோழி வளர்ப்பு 42 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து, முட்டை உற்பத்தியின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. மேலும் ஆறு புதிய தாய்க் கோழி வளர்ப்பு பண்ணைகள் இவ்வாண்டுப் பகுதியில் நிறுவப்பட்டமையானது ஒரு நாள் கோழிக்குஞ்சுகளுக்கான வளர்ந்து வரும் கேள்வியை பூர்த்தி செய்ய உதவும். மேலும், இவ்வாண்டுப் பகுதியில் விலங்குத்தீன் உற்பத்தியும் 30 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேளையில் அது சராசரி விலங்குத்தீன் விலைகளின் செலவினையும் குறைத்தது. 2011இல் இது கோழிப் பண்ணையாளர்களின் கோழி இறைச்சியினதும் கோழி முட்டையினதும் உற்பத்திச் செலவினைக் குறைக்க உதவியது. இதற்கமைய, 2010 உடன் ஒப்பிடுகையில் கோழி இறைச்சியின் சராசரி விலை கி.கிறாமிற்கு ரூ. 356 இலிருந்து ரூ.344 இற்கும் கோழி முட்டையின் விலை முட்டையொன்றிற்கு ரூ.13.20 இலிருந்து ரூ.11.80 இற்கும் வீழ்ச்சியடைந்தது.

## காடாக்கல்

**காடாக்கல் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி, 2011 இறுதியில் இலங்கையின் மொத்தக் காட்டுப் பரப்பு 1,951,472 எக்டேயர்களாகக் காணப்பட்டது.** காடாக்கல் திணைக்களம் காட்டு நிலப்பரப்பினை அதிகரிக்கும் சிறப்புக் கவனத்துடன் தொடர்ந்தும் அதன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் காடாக்கல் திணைக்களம் வவுனியாவிலும் கிளிநொச்சியிலும் தீவிரமான வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. மேலும், நாட்டின் காட்டு நிலப்பரப்பினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை, ஐ.நாடுகளின் காடழிப்பு மற்றும் தரம் குறைந்து போதல் என்பனவற்றின் மூலம் வெளியிடப்படும் கழிவுகளைக் குறைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012இல் நிதி உதவிகளை எதிர்பார்க்கிறது. 2011ஆம் ஆண்டில் மீள்காடாக்கப்பட்ட நிலப்பரப்பு 2010இன் 905 எக்டேயர்களுடன் ஒப்பிடுகையில் 1,360 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. மேலும் தனியார் துறையின் கீழ் ஏறத்தாழ 448 எக்டேயர்கள் இவ்வாண்டில் காடாக்கப்பட்டன.

**உலகளாவிய சந்தையில் இலங்கைத் தேயிலையின் உற்பத்தியாக்கத்தினையும் தேயிலையின் தரத்தினையும் பெறுமதி கூட்டல்களையும் சந்தைப்படுத்தலையும் உயர்த்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** 2012 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தேயிலை மீளப் பயிரிடலுக்கான உதவுதொகை அனைத்துப் பயிர்ச்செய்கையாளர்களுக்கும் எக்டேயரொன்றிற்கு ரூ.250,000 இலிருந்து எக்டேயரொன்றிற்கு ரூ.300,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. அதேநேரம் புதிய பயிரிடலுக்கான உதவுதொகையும் எக்டேயரொன்றுக்கு ரூ.50,000 இலிருந்து ரூ.150,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. அத்துடன், மீள்பயிரிடல் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு சலுகை ரீதியான கடன் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழுள்ள பயிர் செய்யப்படக் கூடிய ஆனால் பயன்படுத்தப்படாதிருக்கும் ஏறத்தாழ 15,150 எக்டேயர் நிலத்தினை பொருத்தமான தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் பொறிமுறையொன்றினை வடிவமைப்பதற்காக குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. அறுவடைக்குப் பின்னைய தொழில் நுணுக்கங்களை மேம்படுத்துவதன் மூலம் பச்சைத் தேயிலையின் தரத்தினை உயர்ந்த மட்டமொன்றில் பேணுகின்ற இலக்குடன் "நன்டலு உபாயம்" நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தேயிலையின் தரத்தினை மேம்படுத்துகின்ற வேளையில் தொழிற்சாலைகளில் நிராகரிக்கப்பட்ட கழிவுத் தேயிலையின் அளவையும் குறைப்பதன் மூலம் தேயிலை உற்பத்தியின் அளவினைக் கணிசமானளவிற்கு மேம்படுத்தி ஏற்றுமதி வருமானத்தினையும் உயர்வடையச் செய்கிறது. "சுத்தமான சிலோன் தேயிலையின்" உலகளாவிய ஊக்குவிப்பு பிரச்சாரத்தினை வலுப்படுத்தும் பிரத்தியேக நோக்கத்திற்காக ஏற்றுமதி மையத்தில் வைத்து தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்து தீர்வையொன்றை சேகரிப்பதன் மூலம் "தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் நிதியம்" நிறுவப்பட்டது. மேலும், ஏலமிடும் பொறிமுறைகள் கூடியளவிற்கு வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்படுவதன் மூலம் கொழும்பு தேயிலை ஏலங்களின் தொழிற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு கொழும்பு தேயிலை ஏலங்களில், ஏலங்களுக்கு முன்னைய மற்றும் பின்னைய பொறிமுறைகளை தன்னியக்கப்படுத்துவற்கான செயற்றிட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், தேயிலைத் துறை தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவது பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் தேயிலை சபையொன்று மீள உருவாக்கப்பட்டது. ஆலோசனைச் சபையொன்றும் ஆர்வலர்களுக்கு அவர்களது கைத்தொழில் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் தொழிலாளர் பிரச்சனைகள் பற்றி ஆலோசனை வழங்குவதற்காக தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மீள நிறுவப்பட்டது. தேயிலையின் பெறுமதிகூட்டலை அதிகரிப்பதற்காக தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட "சென். கூம்பஸ் வையிட் ரீ-பட் ப்ளஸ்" என்று பெயரிடப்பட்ட புதிய தேயிலை உற்பத்தியானது கொழும்பு தேயிலை ஏலங்களில் சந்தைப்படுத்தப்பட்டதுடன், 2011இல் இது கி.கிறாமொன்றுக்கு சராசரி விற்பனைப் பெறுமதியாக ரூ.15,000 இனைப் பெற்றுக் கொண்டது.

**இறப்பர் துறையின் விளைச்சல், உற்பத்தித் தரம் என்பனவற்றை மேலும் அதிகரிப்பதற்கும் மூலவளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கும் நிறுவன ரீதியான உதவி வழங்கப்பட்டது.** இறப்பர் உற்பத்தியின் உறுதியான வளர்ச்சிக்காக இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக 2011இல் புதிய கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் சிறு உடமையாளர் துறையில் 6,000 எக்டேயர்களுக்கு மழைத் தடுப்பிகளைப் பொருத்துவதனையும் கம்பனிகள் துறையில் 10,000 எக்டேயர்களுக்கு மழைத் தடுப்பிகளைப் பொருத்துவதனையும் இலக்காகக் கொண்டு அவற்றிற்கு பகுதியளவு உதவுதொகையினை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை உருவாக்கியது. கிழக்கு மாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையினை மேலும் விரிவாக்குவதற்கு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அப்பிராந்தியத்திற்கு பொருத்தமான புதிய வகைப் பதியங்களை வழங்கும் பொருட்டு இம்மாகாணத்திலுள்ள மகா ஓயா பதியத்தலாவை என்னுமிடத்தில் புதிய இறப்பர் கன்றுகளின் நாற்றுமேடை தொடங்கப்பட்டது. மேலும், பாரம்பரியமற்ற பிரதேசங்களில் குறிப்பாக அநுராதபுரம், வவுனியா மற்றும் பொலனறுவை போன்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்துவதற்காக சாத்தியவள ஆய்வொன்று தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதேவேளை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் வடிவமைக்கப்பட்டு நிறுவப்பட்ட தொழில்நுட்பத்தினை மேம்படுத்துகின்ற அவர்களின் முயற்சியின் தொடர்ச்சியாக, கிறேப் இறப்பரை

உலர வைக்கும் காலப்பகுதியை 3 நாட்களிலிருந்து ஒரு சில மணித்தியாலங்களுக்கு குறைப்பதற்காக புதிய உலரச் செய்யும் முறைமையொன்றினை நிறுவியது. இறப்பர் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காகவும் இறப்பர் மரங்களின் வாழ்நாள் காலத்தை நீடிப்பதற்காகவும் இரண்டு புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட தாழ்ந்த தீவிரமான அறுவடை முறைமைகள் வர்த்தகத் தொழிற்பாடுகளுக்காக பரீட்சிக்கப்பட்டன.

**2011இல் தெங்குத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** தெங்குப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதன் மூலம் 2016இல் 3,650 மில்லியன் காய்களை பெற்றுக்கொள்வதற்காகக் "கப்புருக புறவற" என்ற பெயரிலான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2011இல் 4 மில்லியன் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டதுடன் 2012இல் இன்னுமொரு 6 மில்லியன் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன. அதேவேளை இரண்டு புதிய கலப்பு விதைத் தோட்டங்கள் மாரவிலவிலும் பூனகரியிலும் நிறுவப்பட்டுள்ளதுடன் வட மாகாணம் உட்பட பாரம்பரியமற்ற தெங்குப் பிரதேசங்களில் பொருத்தமான நிலங்களை அடையாளம் காண்பதற்கான பொருத்தமான நிலங்களை வகைப்படுத்துகின்ற செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. வெலிகம தென்னோலை வாடல் நோய்க்கான தீர்வாக தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இந்நோயினைத் தாக்குப்பிடித்து பயிராகக் கூடிய இனமான இலங்கை வளர்ப்பான பச்சைக் குள்ளமான வகையொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அதேவேளை, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை வீட்டு நுகர்வுத் தேவைக்காக தேசிய வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றினை மேம்படுத்துவதற்கான தேவையை அடையாளம் கண்டுள்ள வேளையில் தெங்குடன் தொடர்பான கைத்தொழில்களுக்காக தெங்கு முக்கோணப் பிரதேசத்தில் தேங்காய் வழங்கல்களும் மேம்படுத்தப்பட்டன.

**ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களின் விளைச்சலையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக அநேக வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** மீள் பயிரிடல் மற்றும் புதிதாகப் பயிரிடும் நடவடிக்கைகளை அதிகரிக்கின்ற அதேவேளையில் ஏற்கனவேயுள்ள பயிர்ச்செய்கையின் விளைச்சலை அதிகரிக்கும் பொருட்டும் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் பல வழிமுறைகளை மேற்கொண்டது. மேலும், ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் 2011இல் உயர்ந்த தரமான பயிரிடல் பொருட்களையும் தொழில்நுட்ப உதவிகளையும் விரிவாக்கல் பணிகளையும் வழங்கியது. தற்பொழுது கறுவா, மிளகு, கராம்பு போன்ற ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்கள் தொகை வடிவில் மூலப் பொருளாக ஏற்றுமதி செய்யப்படுவதுடன் பெறுமதிகூட்டப்பட்ட வடிவிலான ஏற்றுமதிகள் மிகக் குறைவாகவேயுள்ளன. எனவே, ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் தர மேம்பாட்டுடன் சேர்ந்த விதத்தில் உற்பத்திகளைப் பன்முகப்படுத்தும் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக உதவுதொகை நிகழ்ச்சித்திட்டமொன்றினை மேற்கொண்டது.

**சிறந்த வேளாண்மை நடைமுறைகளையும் வேளாண்மை உதவிப் பணிகளையும் மேம்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகள் இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.** மேலும், வேளாண்மைத் திணைக்களம் நெல் துறையில் விதந்துரைக்கப்பட்ட 100 சதவீதமான அசேதன வளமாக்கியுடன் ஒப்பிடுகையில் விதந்துரைக்கப்பட்ட 75 சதவீதம் கொண்ட அசேதன வளமாக்கியுடன் கூடிய எக்டேயரொன்றிற்கான 10 மெற்றிக்தொன் சேதனவளமாக்கிக்கலவை உயர்ந்த விளைச்சலை அளிக்குமென எடுத்துக்காட்டியது. மேலும் சேதன வளமாக்கியைப் பயன்படுத்துவது நீண்ட காலத்திற்கு மண்ணின் வளத்தைப் பேண உதவும். பெரிய வெங்காய பயிர்ச்செய்கை இலங்கையில் பருவகாலம் சார்ந்ததாக இருப்பதுடன் நான்கு மாதங்களுக்கு மேல் இதனை களஞ்சியப்படுத்தி வைப்பது, அறுவடைக்குப் பின்னைய பொருத்தமற்ற கையாள்கைகளின் காரணமாக சவாலுக்குரியதாக இருப்பதுடன் இதன் காரணமாக நாடு இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்திலேயே பெருமளவிற்கு தங்கியிருக்க வேண்டியுள்ளது. இவ்விடர்பாடுகளை வெற்றி கொள்வதற்கு அறுவடைக்குப் பின்னைய தொழில்நுட்ப நிறுவகம் களஞ்சியத்திலுள்ள பெரிய வெங்காயத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கு புதிய அமைப்பியல்பு ஒன்றினை அறிமுகப்படுத்தியது. இவ்வாண்டுப் பகுதியில், அரிசி ஆராய்ச்சி நிறுவகம் வர்த்தக நோக்கங்களுக்காக 3½ மாத வயது தொகுதி வர்க்கங்களின் (பீடபிள்யு 367 மற்றும் எல்டி 368) இரண்டு புதிய அரிசி இனங்களை வெளியிட்டது. மேலும், காய்கறிகளிலும் பழவர்க்கங்களிலும் ஏற்படும் அறுவடைக்குப் பின்னைய இழப்புக்களைக் குறைக்கும் பொருட்டு நுகர்வோர் அலுவல்சார் அதிகாரசபையின் கீழ் இவ்வாண்டுப் பகுதியில் புதிய ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலமாக தெரிந்தெடுக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் தொடர்பாக பிளாத்திக்குப் பெட்டிகளைப் பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டது. அதேவேளை, 2011இல் பெரும்போகத்திற்கும் சிறுபோகத்திற்குமிடையிலான இடைப்பட்ட பருவகாலத்தில் நெல் வயல்களில் பயறு, உழுந்து மற்றும் தட்டைப் பயறு போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட களப் பயிர்களின் பயிர்ச்செய்கை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. வேளாண்மைத் திணைக்களம், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியில் ஆர்சனிக் இரசாயனம் விதந்துரைக்கப்பட்ட மட்டத்திற்கு மேலே இருக்கின்றது என்று ஊடகங்களினால் எடுத்துக்கூறப்பட்ட சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பாக தொடர்ச்சியாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டதுடன், உள்நாட்டு அரிசி வர்க்கங்களிலுள்ள ஆர்சனிக் இரசாயனத்தின் அளவு உலக சுகாதார அமைப்பினால் அனுமதிக்கப்பட்ட மட்டங்களுக்குள்ளேயே காணப்படுகின்றது என்பதனை நிரூபித்தது. மேலும், வாடகை வேளாண்மையாளர்களினதும் நிலச் சொந்தக்காரர்களினதும் தீர்வு காணப்படாத பல பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் தற்போதுள்ள 2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வேளாண்மை அபிவிருத்திச் சட்டத்திற்கு அவசியமான திருத்தங்களை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**வேளாண்மை உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக 2012ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் பல்வேறு வழிமுறைகளை முன்மொழிந்தது.** "அரிசி ஏற்றுமதி பொருளாதாரம்" என்ற கருதுகோளுக்கு வசதியளிக்கும் விதத்தில் தெற்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வட மாகாணங்களில் உத்தேச "அரிசி ஏற்றுமதி வலயங்களில்" நவீன அரிசி பதனிடுகின்ற ஆலைகளை நிறுவுவதற்காக வரிச் சலுகைகளை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்குவதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. வரவு செலவுத்திட்டம் கறுவா, மிளகு, ஏலக்காய் மற்றும் கொக்கோ ஆகிய பயிர்களின் இடைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கான உதவிகளை வழங்குவதற்கு வரவு செலவுத்திட்டம் முன்மொழிந்திருக்கிறது.

**2011 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட பல வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** இதன்படி, 2011 மேயிலிருந்து வளமாக்கி உதவுதொகை திட்டம் அனைத்துப் பயிர்களையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டதுடன் விரிவாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கலக்கப்பட்ட மற்றும் கலக்கப்படாத வளமாக்கிகள் ரூ.1,200/50 கி.கி. மற்றும் ரூ.1,300/50 கி.கி. என்ற அடிப்படையில் விநியோகிக்கப்பட்ட வேளையில் நெல்லிற்கான வளமாக்கி உதவுதொகைத் திட்டம் ரூ.350/50 கி.கி. என்ற அடிப்படையில் தொடர்ந்தும் வழங்கப்பட்டன. ஆகவே, நெல் துறையின் அசேதன வளமாக்கிச் செலவில் 90 சதவீதத்தினையும் ஏனைய பயிர்களின் செலவில் 65 சதவீதத்தினையும் அரசாங்கம் தாங்கிக் கொள்ளும். இதன்படி, வளமாக்கி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்திற்கான மொத்தச் செலவில் ரூ.29.8 பில்லியன் 2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டது. மேலும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2011இல் முன்னுரிமையளிக்கப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமான "திவி நகும" நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வாழ்வாதாரம், கிராமிய அபிவிருத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பனவற்றை மேம்படுத்துகின்ற நோக்குடன் வேளாண்மையை ஊக்குவிப்பதற்கு சிறந்த வலியுறுத்தல்கள் வழங்கப்பட்டன. 2011இல் ரூ.3,864 மில்லியன் 2011ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டதுடன் வீட்டுத்தோட்டத்தினை மேம்படுத்துவதற்காக 3.6 மில்லியன் விதைகள் மற்றும் வளமாக்கிப் பைகளின் விநியோகத்தின் மீதும் கோழி வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக 360,000 ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் மீதும் தெங்குப் பயிர்ச்செய்கைக்கு உதவியளிப்பதற்காக 1.7 மில்லியன் தென்னங்கன்றுகளின் மீதும் ரூ.1,528 மில்லியன் செலவிடப்பட்டன. நாற்றுமேடைகளினை மேம்படுத்துவதற்கான பசுமை வலையமைப்பு, வர்த்தக ரீதியான மலர்ப் பயிர்ச்செய்கைக்கான உதவி, உயர் பெறுமதி கொண்ட பயிர் உற்பத்தி என்பன இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய முக்கிய அம்சங்களாகும்.

**பால் உற்பத்தியில் சுய நிறைவு என்ற இலக்கினை அடையும் விதத்தில் பாற்பண்ணைத் துறையில் இயலளவையும் உற்பத்தியாக்கத்தினையும் மேம்படுத்துவதற்காக அநேக வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** பாற்பண்ணை வேளாண்மையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2011ஆம் ஆண்டுப் பகுதியில் திரவப்பாலின் உற்பத்தியாளர் விலையானது ஒரு லீற்றருக்கு ரூ.33.20 இலிருந்து லீற்றருக்கு ரூ.50 இற்கு (கொழுப்பு மற்றும் திண்மக் கொழுப்பற்ற விகிதம் 4.2/8.3) உயர்த்தப்பட்டது. மேலும், பாற்பண்ணைத் துறையில் நடவடிக்கைத் திட்டமொன்றினை வடிவமைப்பதற்காக விலங்கு அபவிருத்தி அமைச்சினால் விலங்கு வளர்ப்பு முதன்மைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டதுடன் இது இவ்வாண்டுப் பகுதியில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. அதேவேளை விலங்கு உற்பத்தி மற்றும் நலத்துறைத் திணைக்களம் இவ்வாண்டுப் பகுதியில் மேற்கொண்ட 181,725 செயற்கை முறையில் சினைப்படுத்தும் நடவடிக்கையானது நாட்டில் கால்நடையின் தொகையினை அதிகரிக்க உதவும். மேலும், இவ்வாண்டுப் பகுதியில் 56 புதிய பாற்பண்ணைக் கிராமங்கள் நிறுவப்பட்டன. அத்துடன், முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பாதம் மற்றும் வாய் வழித்தடுப்பு மருந்துகள் உற்பத்தி செய்வதற்கான ஆய்வுகூட வசதிகள் நிறுவப்பட்டன.

**மீன்பிடித் துறையினை மேம்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் நடைமுறைக்கிடப்பட்டன.** மீன்பிடித் துறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதற்காக அடித்தளத்தில் இழுவைப் படகு மூலமான மீன்பிடி, டைனமற் வெடிகள் மற்றும் நைலோன் மீன் வலைகளைப் பயன்படுத்துதல் போன்ற மீன்பிடிகளைச் சிதைத்துவிடும் மீன்பிடி முறைகளை இலங்கைக் கடலில் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டது. மேலும், மீன்பிடிக் கைத்தொழிலுக்கு 2011 ஏப்பிறலிருந்து தொடங்கும் ஐந்தாண்டு காலப்பகுதியில் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. உரிமங்களை வழங்குவதற்கும் படகுகளின் பதிவுகளுக்குமாக விதிக்கப்பட்ட கட்டணம் 2011 சனவரியிலிருந்து நீக்கப்பட்டது. நாட்டின் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் மூலவளங்கள் அதேபோன்று ஆழ்கடல் மீன்பிடி என்பனவற்றை ஊக்குவிப்பதற்காக பங்கேற்கும் வர்த்தக வங்கிகளின் ஒத்துழைப்புடன் மீன்பிடி அமைச்சினால் "தியவற திறிய" கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. 2011 மாச்சில் நவீன வசதிகளுடன் பேலியகொடவில் மத்திய மீன் சந்தைக் கட்டடத்தொகுதி திறக்கப்பட்டமையானது மீன் சந்தையினையும் மீன்பிடிக்குப் பின்னைய கையாளலையும் மேம்படுத்துவதற்கும் பங்களித்தது. அதேவேளை, வட மாகாணத்தில் மீன்பிடி நடவடிக்கைகள் மீட்சி பெறுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் பதினைந்து (15) ஐஸ்கட்டி தயாரிக்கும் பொறிகளும் ஏழு (7) குளிரூட்டும் அறைகளும் நிறுவப்பட்டன. இவை முறையே நாளொன்றிற்கு 107 மெற்றிக்தொன் இயலளவினையும் நாளொன்றிற்கு 263 மெற்றிக்தொன் இயலளவினையும் கொண்டிருந்தன.

## கைத்தொழில்

**கைத்தொழில்துறை 2010இன் 8.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீதம் கொண்ட சாதனைமிக்க மட்டத்தால் 2011இல் வளர்ச்சியடைந்திருக்கையில் மொ.உ.உற்பத்தியின் பங்கு 2010இன் 28.7 சதவீதத்திலிருந்து 2011இல் 29.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இவ்வாண்டில் கைத்தொழிலுக்கு நிலவிய சாதகமான சூழலைப் பிரதிபலிக்கும் வகையில் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு, மின்வலு, வாயு மற்றும் நீர் மற்றும் கட்டடவாக்கம் ஆகிய அனைத்துத் துறைகளும் 2011ஆம் ஆண்டில் உயர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன.

**கைத்தொழில் துறையில் மிகப் பெரிய துணைத் துறையான தொழிற்சாலைக் கைத்தொழில் 2010இன் 7.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 8.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** தொழிற்சாலைக் கைத்தொழிலின் அனைத்து முக்கிய வகைகளும் அதிகரித்த உள்நாட்டுச் செயற்பாடு மற்றும் இடர்பாடான உலகச் சூழலுக்கு மத்தியிலும் ஏற்றுமதிக் கைத்தொழில்களின் மீள்எழுச்சியால் முன்னேற்றமடைந்த செயலாற்றத்தைப் பதிவு செய்தன. உயர்ந்த உண்மை வருமான மட்டங்களால் வழிநடத்தப்பட்ட அதிகரித்துச் செல்லும் தனியார் துறை நுகர்வு, யுத்தத்திற்குப் பின்னரான நம்பிக்கையுடன் இணைந்த குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்கம் உள்நாட்டுக் கேள்வியைத் தூண்டி தொழிற்சாலை கைத்தொழில் வெளியீட்டில் வளர்ச்சியை ஏற்படுத்தியது. செலவைக் குறைக்கும் உபாயங்கள் மற்றும் பொருள் மற்றும் சந்தைப் பல்வகைப்படுத்தல் உபாயங்கள் நடைமுறைப்படுத்தியதன் மூலம் மரபு ரீதியான வெளிநாட்டுச் சந்தைகளிலிருந்தான மோசமான கேள்விக்கு மத்தியிலும் ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்கள் அவற்றின் போட்டித்தன்மையைப் பேணின.

**அனைத்து பொருளாதாரச் செயற்பாடுகளின் பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தலின் அடிப்படையில் மத்திய வங்கி 2011இல் மீளாய்வு 2இலிருந்து மீளாய்வு 4இற்கு மாதாந்த கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் தொகுத்தலை திருத்தியமைத்தது.** ஐக்கிய நாடுகளால் தொகுக்கப்பட்ட பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் பொருளாதாரத்தில் அனைத்து உற்பத்திச் செயற்பாடுகளின் வகைப்படுத்தலுக்கான பன்னாட்டு உசாத்துணையாக விளங்குகிறது. பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தலின் மீளாய்வு 4 இன்படி புதிய கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 23 பிரிவுகளைக் கொண்டிருப்பதுடன் தயாரிப்புத் துறையில் விபரமான தகவலை உள்வாங்குவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் 44 குழுக்களாகவும் 76 வகுப்புக்களாகவும் மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. பொருளாதாரத்தின் கைத்தொழில் துறையில் தோற்றம் பெற்றுவரும் அமைப்பு ரீதியிலான மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தித் தொகுப்பில் அணித்தாகப் பயன்படுத்தும் போது துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கும் உற்பத்திச் சுட்டெண்ணின் அடிப்படை ஆண்டும் 2010இற்கு புதுப்பிக்கப்பட்டது. (சிறப்புக்குறிப்பு 6 ஐப் பார்க்கவும்). திருத்தியமைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் படி கைத்தொழில் துறை 2011ஆம் ஆண்டு 9.2 சதவீத வேகமான அதிகரிப்பைக் காட்டியது.

**உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களிலான வளர்ச்சி உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திப் பிரிவுகள் மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திப் பிரிவில் காணப்பட்ட உயர் செயலாற்றத்தால் ஏற்பட்டது.** நுகர்வோர் செலவின் உயர் மட்டம் மற்றும் சுற்றுலா தொடர்பான செயற்பாட்டிலான வளர்ச்சியால் ஏற்பட்ட சில்லறை வர்த்தக செயற்பாட்டிலான விரிவாக்கம் காரணமாக உணவு மற்றும் பானங்களுக்கான கேள்வி தொடர்ந்தும் உறுதியாகக் காணப்பட்டது. அரச மற்றும் தனியார் துறை இரண்டாலும் மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த கட்டடவாக்கச் செயற்பாடு முக்கியமாக சிமெந்து மற்றும் கட்டடவாக்கப் பொருட்களை உள்ளடக்கும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திக் கைத்தொழில்களிலான உயர் வளர்ச்சியைத் தூண்டியது.

**மரபு ரீதியான முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளிலான ஆர்வம் குறைந்த கேள்விக்கு மத்தியிலும் ஏற்றுமதிக் கைத்தொழில்கள் முன்னேற்றமடைந்த போட்டித்தன்மையூடாக தொடர்ந்தும் எழுச்சி பெற்றதாக விளங்கின.** ஏற்றுமதிச் சந்தையை நோக்கமாகக் கொண்ட கைத்தொழில்களிலான வளர்ச்சி அணியும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறி மற்றும் கருவி, வைரங்கள் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணப் பிரிவுகளால் பெரிதும் உந்தப்பட்டது. உலகச் சந்தைகளில் நிலவிய படிப்படியான மீட்சி எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைவாகக் காணப்பட்ட போதிலும் முக்கிய கைத்தொழில் உற்பத்திகளுக்கான ஏற்றுமதிக் கேள்வியை அதிகரித்தன. எனினும், இச்சந்தைகளில் நிலவிய தொடர்ச்சியான பலவீனத்தைக் கருத்திற் கொள்கையில், ஏற்றுமதிச் சந்தையை நோக்கமாகக் கொண்ட கைத்தொழிலாளர்கள் முன்னேற்றமடைந்த வடிவமைப்பு இயலளவுகள் மற்றும் பசுமைத் தயாரிப்பிலான சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றல் போன்ற போட்டித்தன்மை வாய்ந்த வழிமுறைகளைப் பின்பற்றியிருக்கையில் முடிவு உற்பத்திகளின் முக்கிய வாங்குநர்களுடன் நெருங்கிய உறவுகளைப் பலப்படுத்தினர்.

**உணவுப் பொருட்களின் தயாரிப்பு 2010இன் 12.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 8.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011இலான மிதமான வளர்ச்சி 2010இல் உயர் தளத்தின் தாக்கம் காரணமாக ஏற்பட்டது. இது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து ஏற்பட்ட விரைவாக விற்பனையாகும் நுகர்வுப் பொருட்கள் மற்றும் ஏனைய உணவுப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வியால் ஏற்பட்டது. மீன் பதனிடல் மற்றும் பாதுகாத்தல், வெதுப்பக உற்பத்திகள், பால் பண்ணை

உற்பத்திகள், மாச்சத்து மற்றும் மாப்பொருள் உற்பத்திகள் உணவுப் பொருட்கள் பிரிவிலான வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளர்களாக விளங்கின. தற்போதைய பண்ணைகளில் பொறி மற்றும் நவீனமயமாக்கலில் மேற்கொள்ளப்பட்ட மூலதன முதலீடுகள் பாற்பண்ணை உற்பத்திகளில் உயர் வளர்ச்சியைப் பதிவு செய்வதற்கு பங்களிப்புச் செய்தன. தயாரிக்கப்பட்ட உணவுக்கான பலமான உள்நாட்டுக் கேள்விக்கு மத்தியில் வெதுப்பக உற்பத்திகளும் கணிசமானளவில் வளர்ச்சியடைந்தன. வெதுப்பக உற்பத்திகளிலான உயர் வளர்ச்சியும் வெதுப்பக மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுக்கான பிரதான மூலப்பொருளாக விளங்கும் மாச்சத்து மற்றும் மாப்பொருள் உற்பத்திகளுக்கான வளர்ச்சிக்கு வழியமைத்தன.

**குடிபானம், கனிப்பொருள் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் மற்றும் மதுசாரத்தை வடிகட்டல் மற்றும் கலத்தல் என்பவற்றின் வளர்ச்சியால் பெரிதும் பங்களிப்புச் செய்யப்பட்ட பானங்களின் தயாரிப்பு 2010இன் 19.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 10.2 சதவீதத்திற்கு மிதமடைந்தது.** குடிபானங்களின் உற்பத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான அதிகரித்த சந்தை நுழைவு, முன்னேற்றமடைந்த வருமான மட்டங்கள் காரணமாக அதிகரித்த நுகர்வோர் செலவிடல் அது போல் சுற்றுலாத் துறையிலான உயர் வளர்ச்சி உத்வேகத்திலிருந்து நன்மையடைந்தது.

**2010இல் 7.2 சதவீதத்தால் அதிகரித்த புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு 2011இல் 6 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** புகையிலை உற்பத்திகளின் வளர்ச்சிக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான முன்னேற்றமடைந்த சந்தை நுழைவு, பகிர்ந்தளிக்கும் வழிமுறைகளில் ஏற்பட்ட விரிவாக்கம், அதிகரித்த சுற்றுலாத்துறை அது போல் சட்ட ரீதியற்ற சிகரெட்டுக்களின் இறக்குமதி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வழிமுறைகளால் பெரிதும் உதவப்பட்டது.

**அணியும் ஆடைகளின் தயாரிப்பு 2010இன் 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 13.8 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** ஆடைத் துறையிலான வளர்ச்சி ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியங்களிலுள்ள முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் நிலவிய பொருளாதார மெதுவடைவுக்கு மத்தியில் அடையப்பட்டமை பாராட்டப்படத்தக்கதாகும். இதனால், ஆடை ஏற்றுமதிகள் 2011இல் ஐ.அ.டொலர் 4 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க மைல்கல்லை விஞ்சின. நம்பத்தகுந்த வழங்குநர் என்ற இலங்கையின் மதிப்பு மரபுவழிச் சந்தைகளில் கைத்தொழில் உயர் வளர்ச்சி உத்வேகத்தைப் பேண இயலச் செய்திருக்கையில் ஏனைய மரபு வழியல்லாச் சந்தைகளுக்கான ஏற்றுமதிகளை அதிகரித்தது. பெறுமதிச் சங்கிலி என்று அறியப்படும் மூலப்பொருள் முதற்கொண்டு வாடிக்கையாளர் கைகளுக்கு இறுதிப் பொருட்களைக் கொண்டு சேர்ப்பது வரையான அனைத்துச் செயற்பாடுகளையும் உயர்த்துவதில் கவனம் செலுத்தி தரம் மற்றும் உற்பத்தித்திறனிலான மேம்பாடுகளுடன் சேர்ந்து முக்கிய வாடிக்கையாளர்கள் மற்றும் உற்பத்தியாளரிடமிருந்து வாடிக்கையாளருக்கு பொருட்களைக் கொண்டு சேர்க்கும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய வழங்கல் சங்கிலியின் பங்காளிகளுடனான உபாயமுள்ள பங்குடமையும் அணியும் ஆடைகள் பிரிவில் உயர் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது.

**ஐரோப்பிய ஒன்றிய பிரதேசத்தில் காணப்படும் தொடர்ச்சியான பணச்சுருக்க அழுத்தங்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவிலான குறைந்த வளர்ச்சியைக் கவனத்திற் கொண்டு தற்போதைய வளர்ச்சி உத்வேகத்தைத் தொடர்ந்தும் பேணுவதற்காக ஆசியப் பிராந்தியம் மற்றும் ஏனைய மரபுவழியற்ற பெறுமதிகூடிய சிறிய சந்தைகளை ஆடைக் கைத்தொழிலாளர்கள் ஆராய்ந்தனர்.** இது சம்பந்தமாக, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா தவிர்ந்த, குறிப்பாக யப்பான், இந்தியா, ரூசியா, சவுதி அரேபியா மற்றும் அவுத்திரேலியாவுக்கான ஆடை ஏற்றுமதிகளில் கணிசமான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். எதிர்காலத்தில் சீனா மற்றும் ரூசியா போன்ற தோற்றம் பெற்று வரும் முக்கிய சந்தைகளுக்கு முன்னுரிமையுடனான சந்தை நுழைவைப் பெறுவதன் மூலம் புதிய சந்தைகளுக்கு பன்முகப்படுத்துவதற்கான வழிமுறைகளும் பலப்படுத்தப்படும்.

**இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் 2010இன் 41.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2011இல் 16.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன.** இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களின் தயாரிப்பு 2011இல் 18.3 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்திருக்கையில் பிளாத்திப் பொருட்களின் தயாரிப்பு மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. ஒட்டுவதற்கான இறப்பர் உற்பத்திகள், இறப்பர் ரயர்கள், ரயர் உறைகள் மற்றும் ரியூப்புக்கள் மற்றும் ஏனைய இறப்பர் உற்பத்திகளிலான உயர்மட்ட ஏற்றுமதிகள் இறப்பர் உற்பத்திகளிலான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. ஐக்கிய அமெரிக்காவில் மந்த நிலையான காலப்பகுதியில் படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்ட இருப்புகள் குறைவடைந்து செல்வதால் கைத்தொழில் துறைக்கான ரயர்களின் ஏற்றுமதி

வரைபடம் 2.3 கைத்தொழிலில் உற்பத்தி சுட்டெண் (2009-2011)



சிறப்புக்குறிப்பு 6

# கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் மீளாய்வு

## அறிமுகம்

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் நாடொன்றின் கைத்தொழில் துறை செயலாற்றத்தின் முக்கிய குறிகாட்டியாகும். இச்சுட்டெண் கைத்தொழில் துறையின் செயலாற்றத்தை அளவிடுவதற்கு தற்போதைய காலப்பகுதியிலான கைத்தொழில் செயற்பாட்டை கடந்த காலத்தில் தொடர்பான அடிப்படைக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகிறது. கைத்தொழில் துறையில் பெறுமதிகூட்டலைத் தீர்மானிப்பதற்கு நாட்டின் தேசிய கணக்குகளைத் தொகுக்கும் போது இச்சுட்டெண் முக்கிய ஆக்கக்கூறாக விளங்குகிறது. இச்சுட்டெண் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்படக் கூடியதாக இருப்பதால் இது மொஉஉற்பத்தியின் முன்னணி வகிக்கும் குறிகாட்டியாகவும் கருதப்படலாம். எனவே, அனைத்தையுமுள்ளடக்கிய கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் தீர்மானம் மேற்கொள்ளல், கொள்கை உருவாக்கம், ஆராய்ச்சி மற்றும் பொருளாதாரத் தரவை பன்னாட்டு ரீதியாக ஒப்பிடுதல் என்பவற்றுக்கான கைத்தொழில் துறை செயலாற்றம் தொடர்பான பயனுள்ள தகவலை வழங்குகிறது.

இலங்கையில் கைத்தொழில் துறை மொஉஉற்பத்தியின் 29 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க பங்கிற்கு வகைகூறுகிறது. கைத்தொழில் துறையினுள் மிகப் பெரிய துறையான தயாரிப்பு, ஒட்டுமொத்த கைத்தொழில் துறையின் 60 சதவீதத்துக்கு வகைகூறுகிறது. தயாரிப்புத் துணைத் துறையிலான செயலாற்றம் தற்போது மாதாந்த கைத்தொழில் உற்பத்தி அளவுச் சுட்டெண்ணால் (மா.கை.உ.அ. சுட்டெண்) அளவிடப்படுவதுடன், இது மொ.உ.உற்பத்தியைத் தொகுப்பதில் முன்னணி வாய்ந்த குறிகாட்டியாகவும் பயன்படுகிறது. இலங்கையில் கைத்தொழில் துறை மோதலுக்குப் பின்னரான நம்பிக்கையால் ஏற்பட்ட அதிகரித்த வியாபார நம்பிக்கையால் உதவப்பட்டு 2010 இலிருந்து விரைவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. குறிப்பாக, தற்போது தொழிற்படும் கைத்தொழில்களில் ஏற்பட்ட இயலளவிலான விரிவாக்கம் மற்றும் அண்மைய ஆண்டுகளில் புதிய கைத்தொழில்கள் தோற்றம் பெற்றமை உள்ளிட்ட கைத்தொழில் துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகள் 2011இல் இச்சுட்டெண்ணின் தொகுத்தலை திருத்தியமைப்பதற்கு மத்திய வங்கியை கட்டாயப்படுத்தியது.

திருத்தியமைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் (ப.நி.கை.வ.) திருத்தம் 4 ஐ அடிப்படையாகக் கொண்டது. இவ்வகைப்படுத்தல் ஐக்கிய நாடுகளால் வெளியிடப்பட்ட பன்னாட்டு ரீதியாக இணங்கப்பட்ட எண்ணக்கருக்கள், வரைவிலக்கணங்கள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில் பொருளாதாரச் செயற்பாடுகளின் முறைசார்ந்த வகைப்படுத்தலாகும். ஆகப் பிந்திய திருத்தம் பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் 4 2005இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

## தற்போதைய கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

மத்திய வங்கி பன்னாட்டு நியமம் கைத்தொழில் வகைப்படுத்தலின் திருத்தம் 2இன் அடிப்படையில் 1997ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு மா.கை.உ.அ. சுட்டெண் 1988இல் தொகுக்கத் தொடங்கியது. மாதாந்த மா.கை.உ.அ. சுட்டெண் அட்டவணை சி.கு.6.1 இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு ஒன்பது முக்கிய கைத்தொழில் வகைகளின் நியதிகளில் தயாரிப்புத் துறை தொழிற்சாலைக் கைத்தொழிலில் வெளியீட்டை அளவிடுகிறது. மா.கை.உ.அ. சுட்டெண்ணுக்கான உற்பத்தித் தரவு மாதாந்த அடிப்படையில் தனியார் துறையிலுள்ள 150 கம்பனிகளிலிருந்து பெறப்பட்டது.

அட்டவணை சி.கு. 6.1 — மா.கை.உ.அ.சுட்டெண்ணின் வகைப்படுத்தல் - ப.நி.கை.வ. திருத்தம் 2

| வகை | நிறை |
|---|---|
| 1. உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் | 46.9 |
| 2. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் | 22.7 |
| 3. மரம் மற்றும் மர உற்பத்திகள் | 0.9 |
| 4. தாள் மற்றும் தாள் உற்பத்திகள் | 0.4 |
| 5. இரசாயனம், இறப்பர், பிளாத்திக்கு, பெற்றோலியம் | 14.2 |
| 6. உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் | 5.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 0.2 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 7.7 |
| 9. உற்பத்திகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 1.9 |
| பொதுவான மாகைஉஅசு | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை சி.கு. 6.2 — கைஉசுட்டெண்ணின் வகைப்படுத்தல் - பநிகைவ இன் திருத்தம் 4

| தயாரிப்புப் பிரிவு | நிறை |
|---|---|
| 1. உணவு, உற்பத்திகள் | 21.4 |
| 2. குடிபானங்கள் | 8.5 |
| 3. புகையிலை உற்பத்திகள் | 8.8 |
| 4. புடவை | 1.7 |
| 5. அணியும் ஆடைகள் | 24.0 |
| 6. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் | 0.8 |
| 7. தளபாடம் தவிர்ந்த மர உற்பத்திகள் | 0.1 |
| 8. தாள் மற்றும் தாள் உற்பத்திகள் | 0.2 |
| 9. பதிவு செய்யப்பட்ட ஊடகத்தின் அச்சிடல் மற்றும் மீள் தயாரிப்பு | 0.7 |
| 10. நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் | 2.3 |
| 11. இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் | 6.1 |
| 12. மருந்தாக்கற் பொருட்கள், மருந்து தயாரிக்கும் இரசாயனம் | 0.1 |
| 13. இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் | 9.6 |
| 14. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் | 7.5 |
| 15. அடிப்படை உலோகங்கள் | 0.6 |
| 16. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 4.0 |
| 17. கணனி, இலத்திரனியல் மற்றும் கட்புலச் சாதனங்கள் | 0.2 |
| 18. மின் கருவி | 2.4 |
| 19. பொறி மற்றும் கருவி வே.எ.கு. | 0.4 |
| 20. உந்து ஊர்திகள், இழுபொறிகள் மற்றும் ஓரளவு இழுபொறி | 0.1 |
| 21. ஏனைய போக்குவரத்துக் கருவி | 0.1 |
| 22. தளபாடம் | 0.1 |
| 23. ஏனைய தயாரிப்பு | 0.3 |
| பொதுவான கைஉசுட்டெண் | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தற்போதைய மா.கை.உ.அ. சுட்டெண்ணிலுள்ள முக்கிய குறைபாடாக பரந்த வகைகளான கைத்தொழில்களின் வகைப்படுத்தல் விளங்குகிறது. இதன் விளைவாக, குறிப்பிட்ட வகையின் செயலாற்றம், உதாரணமாக 'புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள்' வகையின் செயலாற்றம் புடவை மற்றும் தோல் உற்பத்திகள் துணை வகைகளின் பங்குகளுடன் ஒப்பிடுகையில் அணியும் ஆடை துணைத் துறையின் பங்கு கணிசமானளவு உயர்வாகையால் தனிப்பட்ட துணை வகைகளின் வளர்ச்சி தொடர்பாக தெளிவான எடுத்துக்காட்டை வழங்கமாட்டாது. மேலும், 1997 அடிப்படை ஆண்டு நிறைகள் இதற்குப் பின்னர் கைத்தொழில் துறையில் தோற்றம் பெற்ற அமைப்பு ரீதியிலான மாற்றங்களைப் பிரதிபலிக்கவில்லை. 1998இல்

மா.கை.உ.அ. சுட்டெண் அறிமுகப்பட்டதைத் தொடர்ந்து தயாரிப்புத் துறையின் அமைப்பும் செயல்முறையும் குறிப்பிடத்தக்களவில் மாற்றமடைந்துள்ளன. புதிய கைத்தொழில்கள் தோற்றம் பெற்றமை மற்றும் தற்போதைய கைத்தொழில்களிலான உயர்ந்த வடிவிலான பெறுமதிகூட்டல் செயல்முறைகள் தயாரிப்புத் துறையின் தற்போதைய அமைப்பைச் சிறந்தளவில் பிரதிபலிக்குமாறு மிக அண்மிய அடிப்படை ஆண்டுடன் பொருத்தமான சுட்டெண்ணைத் தொகுப்பதற்கு கட்டாயப்படுத்தியது. எனவே, கைத்தொழில் உற்பத்தித் தரவின் வகைப்படுத்தல், உள்ளடக்கம் மற்றும் தங்கியிருத்தல் என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டு தற்போதைய மாகைஉஅ சுட்டெண்ணை திருத்தியமைப்பதற்கான தேவை மத்திய வங்கியால் இனங்காணப்பட்டுள்ளது.

### பநிகை வகைப்படுத்தலின் திருத்தம் 4இன் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட கைஉ சுட்டெண்

புதிய அடிப்படை ஆண்டு 2010 உடன் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் தொகுப்பை மத்திய வங்கி ப.நி.கை வகைப்படுத்தல் திருத்தம் 2 இலிருந்து ப.நி.கை வகைப்படுத்தல் திருத்தம் 3 இற்கும் அட்டவணை சி.கு.6.2 இல் காட்டப்பட்டவாறு புதிய கைத்தொழில் வகைகளையும் திருத்தியமைத்தது. 2010இன் உற்பத்திச் செயற்பாட்டின் அடிப்படையிலான நிறைகள் தயாரிப்புத் துறையில் இடம்பெறுகின்ற தோற்றம் பெற்றுவரும் அமைப்பு ரீதியான மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது. உதாரணமாக, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் வகை மாகைஉசு சுட்டெண்ணின் 46.9 சதவீதத்திற்கு வகைகூறியது. திருத்தியமைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் இவ்வகை 38.7 சதவீதத்திற்கு மட்டும் வகை கூறுகையில் இது உணவுப்பொருட்கள், குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் என்பனவற்றின் தயாரிப்பு என மூன்று தனியான வகைளினுள் மீள்வகைப்படுத்தப்பட்டன. உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி வகைகளின் இணைந்த நிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி இக்காலப்பகுதியில் பொருளாதாரம் முன்னேறி வருவதால் அடிப்படை நுகர்வுப் பொருட்களின் தயாரிப்பை மிக நவீனமான பெறுமதிகூட்டல் பொருட்களின் தயாரிப்பைப் பிரதியீடு செய்த பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியிலான மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது. மேலும், திருத்தியமைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் அணியும் ஆடைகள் கைத்தொழிலின் பங்கு மா.கை.அ. சுட்டெண்ணின் 22.7 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்கு அதிகரித்து தைத்த ஆடைக் கைத்தொழிலில் அதிகரித்த பெறுமதி கூட்டலைப் பிரதிபலிக்கிறது

வகைப்படுத்தல் நியதிகளில், திருத்தியமைக்கப்பட்ட கைஉ சுட்டெண் மாகைஉஅ சுட்டெண்ணிலுள்ள 9 முக்கிய வகைகளுடன் ஒப்பிடுகையில் 23 முக்கிய வகைகளை உள்ளடக்கியிருந்தது. பநிகை வகைப்படுத்தல் திருத்தம் 4இன் படி, முக்கிய வகைகள் பிரிவுகளாக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன. ஒரு பிரிவு கூடுதலான விரிவான குழுக்களாகவும் பின்பு விரிவான வகுப்புக்களாகவும் பிரிக்கப்பட்டது. சுட்டெண்ணிலுள்ள வகுப்புகள் அடிப்படைத் தயாரிப்புக்களின் அலகுகள் மற்றும் வகுப்பின் பெறுமதிப்படி நிறையேற்றப்பட்ட பொருட்களை உள்ளடக்கிய ஒரே மாதிரியான உற்பத்திகளைக் கொண்டிருக்கும். இதனால், பொதுவான கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் நிறை ஒவ்வொரு வகுப்பின் பெறுமதியிலிருந்து பெறப்பட்டது.

### கைத்தொழில் துறையின் செயலாற்றம்

பருவ காலத்துக்காக திருத்தியமைக்கப்படாத தரவின் நியதிகளில் திருத்தியமைக்கப்பட்ட கைஉ சுட்டெண்ணால் அளவிடப்பட்டவாறான கைத்தொழில் துறையின் செயலாற்றம் 2006 இலிருந்து கணிக்கப்பட்டதுடன் இது வரைபடம் 2.1இல் காட்டப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் படி தயாரிப்புத் துறையிலான செயலாற்றம் 2009 இலிருந்து தெளிவான மேல் நோக்கிய போக்கை எடுத்துக்காட்டுகிறது. கைஉ சுட்டெண்ணிலான அதிகரிப்பும் 2010 மற்றும் 2011இல் தயாரிப்புத் துறையில் உயர் வளர்ச்சி வீதங்களில் பிரதிபலிக்கப்பட்டது. சராசரியாக, தயாரிப்புத் துறை தொழிற்சாலைக் கைத்தொழில்களிலான வெளியீடு 2009 - 2011 காலப்பகுதியில் 7.4 சதவீதத்தால் அதிகரித்தது.

### முடிவுரை

பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் பொருளாதாரத்தின் கைத்தொழில் துறையில் தோற்றம் பெற்றுவரும் அமைப்பு ரீதியிலான மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது.

வரைபடம் சி.கு. 6.1 கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2010=100




மூலம்: இலங்கை மத்திய வங்கி

இத்துடன், கைஉ சுட்டெண் மொஉஉற்பத்தியைத் தொகுப்பதில் துல்லியத்தை அதிகரித்து திரிபுகளைக் குறைத்து எதிர்காலப் போக்குகளை எதிர்வுகூறுகிறது. மேலும், அநேகமான நாடுகள் பநிகை பல்வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையில் ஒத்த சுட்டெண்களைத் தொகுப்பதால் இது பொருளாதாரச் செயலாற்றத்தின் பன்னாட்டு ரீதியாக ஒப்பிடும் தன்மையை மேம்படுத்துகிறது.

மத்திய வங்கி தோற்றம் பெற்றுவரும் பல எண்ணிக்கையான கைத்தொழில்களிலிருந்தான உற்பத்தியை உள்ளடக்குவதன் மூலம் திருத்தியமைக்கப்படட கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் உள்ளடக்கத்தை மேலும் விரிவாக்க உத்தேசித்துள்ளதுடன் தயாரிப்புத் துறையின் நியாயமான பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்காக தொழிற்பட்டு வரும் கைத்தொழில்களின் செயற்பரப்பை அதிகரிக்கிறது. தற்போதைய ஆற்றல்மிக்க பொருளாதாரச் சூழலின் பின்னணியில், திருத்தியமைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்தி சுட்டெண் பல எண்ணிக்கையான ஆர்வலர்களிடமிருந்து தகவலுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியை பூர்த்தி செய்யவிருக்கிறது. கைத்தொழில் வெளியீடு தொடர்பான உரிய நேரத்திலான மற்றும் துல்லியமான தகவல் கொள்கை வகுப்பாளர்களும் அதுபோல் ஏனைய ஆர்வலர்களும் கைத்தொழில்துறை தொடர்பான தோற்றம் பெற்றுவரும் போக்குகளை இனங்காண்பதையும் தெரியப்படுத்தப்பட்ட கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதையும் வசதிப்படுத்துகிறது.

### உசாத்துணை :

1. United Nations. (2008). International Standard Industrial Classification of all Economic Activities (ISIC): Rev. 4. New York: United Nations.

**அட்டவணை 2.7 கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (அ)**

2010 = 100

| பிரிவு | 2010 | 2011 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| 1. உணவு உற்பத்திகள் | 100 | 108.7 | 8.7 |
| 2. குடிபானங்கள் | 100 | 110.2 | 10.2 |
| 3. புகையிலை உற்பத்திகள் | 100 | 106.0 | 6.0 |
| 4. புடவை | 100 | 100.9 | 0.9 |
| 5. அணியும் ஆடைகள் | 100 | 113.8 | 13.8 |
| 6. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் | 100 | 94.0 | -6.0 |
| 7. மரம் மற்றும் மர உற்பத்திகள் | 100 | 107.9 | 7.9 |
| 8. தாள் மற்றும் தாள் உற்பத்திகள் | 100 | 88.3 | -11.7 |
| 9. அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு | 100 | 100.5 | 0.5 |
| 10. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் | 100 | 106.3 | 6.3 |
| 11. இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் | 100 | 95.3 | -4.7 |
| 12. மருந்தாக்கற் பொருட்கள் | 100 | 133.0 | 33.0 |
| 13. இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் | 100 | 116.5 | 16.5 |
| 14. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் | 100 | 116.7 | 16.7 |
| 15. அடிப்படை உலோகங்கள் | 100 | 115.5 | 15.5 |
| 16. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 100 | 89.6 | -10.4 |
| 17. இலத்திரனியல் சாதனங்கள் | 100 | 98.7 | -1.3 |
| திரண்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் | 100 | 109.2 | 9.2 |

(அ) தற்காலிகமானது மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதிகரித்தது. இறப்பர் கையுறைகளுக்கான வெளிநாட்டுக் கேள்வியும் 2011இல் தொடர்ந்து திருப்திகரமாக விளங்கியது. முக்கியமாக ரயர்கள் உள்ளிட்ட இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கான உள்நாட்டுக் கேள்வி போக்குவரத்து மற்றும் பகிர்ந்தளிப்புச் செயற்பாட்டிலான மேம்பாடுகள் காரணமாக அதிகரித்தது. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களின் தயாரிப்பாளர்களும் 2011இல் நிலவிய குறைந்த வட்டி வீதங்களால் நன்மையடைந்தனர். பிளாத்திக்கு மற்றும் பிவிசி உற்பத்திகளுக்கான உள்நாட்டுக் கேள்வி கட்டடவாக்கக் கைத்தொழிலிலான வளர்ச்சியுடன் இணைந்து செல்லும் விதத்தில் வளர்ச்சியடைந்தது.

**கப்பல் கட்டல் மற்றும் திருத்த வேலையை முக்கியமாக உள்ளடக்கும், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பிரிவின் வளர்ச்சி 2011இல் மெதுவடைந்தது.** "கடல் கடந்த கலங்களின் வழங்கல்" சந்தைப் பிரிவில் பெரும் எண்ணிக்கையான கலங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதன் மூலம் கப்பல் கட்டும் செயற்பாடு 2011இல் சிறப்பாகச் செயலாற்றியது. கப்பல் சொந்தக்காரர்களால் கப்பல் பழுது பார்க்கும் வேலை மீள் அட்டவணைப்படுத்தப்பட்டதற்கு மத்தியிலும் கப்பல் திருத்தச் செயற்பாட்டிலான வளர்ச்சி 2011இல் பேணப்பட்டது.

**இப்பிராந்தியத்தில் புதிய துறைமுகங்கள் தோற்றம் பெறல் மற்றும் கரைகடந்த ஆழ்கடல் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு - அகழ்வு 'கடல் கடந்த கலங்களின் வழங்கல்' சந்தைப் பிரிவில் கப்பல் கட்டுவதற்கான புதிய கேள்வியை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** இத்துடன், அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு தெற்குத் துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் அபிவிருத்தியுடன் கப்பல் திருத்தப் பணிகள் துறையில் தோற்றம் பெற்றுவரும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

**உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உல்லாசப் படகுகள், மீன்பிடிப் படகுகள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான சொகுசு பந்தயப் படகுகளுக்கான கேள்வி 2011இல் மிதமடைந்தது.** இது உள்நாட்டு நீர்வழிகள், உயர் குதிரைவலுச் சக்தியைக் கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளில் நிலவிய சாதகமற்ற சந்தை நிலைமைகளின் காரணமாக ஏற்பட்டது. எனினும், படகு கட்டும் தொழில்நுட்ப நிறுவனத்தால் பின்பற்றப்பட்ட முன்னேற்பாடான வழிமுறைகள் அது போல் கிரமமான படகுக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல் மீன்பிடி மற்றும் பொழுது போக்குச் செயற்பாட்டுக்கான உயர்தரம் வாய்ந்த படகுகளுக்கான உள்நாட்டுச் சந்தையின் அபிவிருத்தியை வசதிப்படுத்தும்.

**உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் 2010இன் 17.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 16.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.** பாரிய அளவிலான அரச உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களிலிருந்தான நீடித்து நிலைத்திருக்கும் கேள்வி காரணமாக சிமெந்து, ஓடு மற்றும் கூரைப் பொருட்கள் கைத்தொழில்களிலான வளர்ச்சி விரைவடைந்தது. கனிப்பொருள் மற்றும் ஏனைய கட்டடவாக்கப் பொருட்களுக்கான கேள்வியும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது நடைபெற்று வரும் மோதலுக்குப் பின்னரான மீள்நிர்மாணச் செயற்பாடுகளின் காரணமாக அதிகரித்தது. போர்சலின் மற்றும் மட்பாண்ட தயாரிப்பாளர்கள் அதிகரித்த போட்டியையும் மரபு வழியான மேற்கத்தையச் சந்தைகளிலிருந்து நலிவடைந்த ஏற்றுமதிக் கேள்வியையும் எதிர்கொண்டனர். எனினும், ஏற்றுமதிச் சந்தைகளிலிருந்தான கேள்வியில் ஏற்பட்ட நலிவடைவு குறிப்பாக புதிய சுற்றுலா விடுதிகளின் நிருமாணம் மற்றும் தற்போதைய சுற்றுலா விடுதிகளை குறிப்பிடத்தக்களவில் புதுப்பித்தல் உள்ளடங்கலாக சுற்றுலாத் துறையின் பலமான செயலாற்றத்தால் எதிரீடு செய்யப்பட்டது.

**2010இல் சிறிதளவில் வீழ்ச்சியடைந்த சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பு 2011இல் 6.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை முழுமையாகக் கொண்டிருக்கும் இப்பிரிவிலான வளர்ச்சி பெரும்பாலும் போக்குவரத்து மற்றும் மின்வலு உருவாக்கச் செயற்பாட்டின் உயர் நுகர்வு காரணமாக ஏற்பட்டது.

**அரசாங்கம் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினூடான பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் "வடக்கின் வசந்தம்" மற்றும் "கிழக்கின் உதயம்" என்பவற்றுக்கு இணையாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அதன் செயற்படும் பரப்பளவை தொடர்ந்து விரிவடையச் செய்தது.** திருகோணமலை கைத்தொழில் வலயத்தின் கட்டம் I ஆனது ஆறு தொழிற்சாலைக் கட்டடங்களின் வர்த்தக தொழிற்பாட்டுடன் பூர்த்தி செய்யப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் கட்டம் II இன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் திராய்மடுவில் புதிய கைத்தொழில் பேட்டைக்கு முன்மொழியப்பட்டது. மன்னாரில் முன்மொழியப்பட்ட கைத்தொழில்பேட்டை பகுதியளவில்பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் முதலீட்டுச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் 2012 மே மாதமளவில் தொழிற்பாடுகளை ஆரம்பிக்கும். பிராந்தியத்தில் கிடைக்கத்தக்க மூலவளங்களில் கவனம் செலுத்தி படகு கட்டுதல், மீன்பிடிக் கருவி, மீன் பதனிடல், பனையை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள் மற்றும் உப்பை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள் ஆகிய துறைகளில் வவுனியாவில் முன்மொழியப்பட்ட கைத்தொழிற் பேட்டைகளுக்கான உள்ளார்ந்த வளம்மிக்க கைத்தொழில்கள் இனங்காணப்பட்டுள்ளன. 2011இல் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கைத்தொழில் பேட்டைகளினுள் அமைந்துள்ள கைத்தொழில்களுக்குப் புதிய கைத்தொழில்கள் நிறுவுவதை விரைவுபடுத்தும் வழிமுறையாக காணி வாடகை மற்றும் பொறிகளின் இறக்குமதிகளுக்காக சலுகை அடிப்படையிலான வீதங்கள் வழங்கப்பட்டன. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு கைத்தொழில் பேட்டைகளினுள் அமைந்துள்ள தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களுக்கான வலு வினைத்திறன் மற்றும் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டத்தின் ஆரம்பக் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. மகம்புர துறைமுகப் பிரதேசத்தைச் சுற்றி சுதந்திர துறைமுக எண்ணக்கரு உந்து ஊர்தி பொருத்துதல், சீமெந்து அரைத்தல் மற்றும் கலக்கும் பொறிகள் மற்றும் ஏனைய பொதியிடல் கைத்தொழில்கள் போன்ற தோற்றம் பெற்று வரும் துறைகளில் கைத்தொழிலாளர்களுக்கான புதிய வழிமுறைகளைத் திறந்தது.

**அரசாங்கம் கைத்தொழிலாளர்களுக்கான புதிய இறை ஊக்குவிப்பு அமைப்பை ஆரம்பித்துள்ளது.** இவை, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான செயற்றிட்டங்களின் கைத்தொழில் அளவின்படியும் உற்பத்தி வகைப்படியும் தகைமை அடிப்படையிலான புதிய இறை ஊக்குவிப்பு அமைப்பை உள்ளடக்குகின்றன. மேலும், புடவை, மருந்துகள், பால்மா மற்றும் சீமெந்துக் கைத்தொழில்களில் ஈடுபடும் இறக்குமதி பிரதியீட்டுக் கைத்தொழில்கள் சிறப்பு ஊக்குவிப்புகளுக்கு தகைமை பெறும் புதிய இறை ஊக்குவிப்பு அமைப்பின் கீழ்

**வரைபடம் 2.4** கைத்தொழிலில் உற்பத்தி சுட்டெண்ணின் உள்ளடக்கம் - 2011




முதலீட்டாளர்கள் வரி விடுமுறைகள், சலுகை ரீதியிலான வருமான வரி வீதங்கள் மற்றும் செயற்றிட்டம் சம்பந்தமான பொறித் தொகுதி, பொறி மற்றும் கருவியின் கொள்வனவுக்காக ஏற்பட்ட செலவினத்தின் மீது சுங்கத் தீர்வை விலக்கல் என்பவற்றைப் பெறுவார்கள். பொருளாதார அபிவிருத்தியை நோக்கி கணிசமானளவில் பங்களிப்புச் செய்யும் செயற்றிட்டங்கள் உபாய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் சட்டத்தின் கீழ் சிறப்பு ஊக்குவிப்புக்களுக்குத் தகைமை பெறும். வியாபாரம் செய்வதை இலகுவாக்குவதை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையை போட்டி வாய்ந்த முதலீடு சேருமிடமாக உருவாக்கும் ஒரு நடவடிக்கையாக தற்போது நடைமுறையிலிருக்கும் முதலீட்டுச் சபையின் கீழான 'ஒரே இடத்தில் அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொள்ளல்' எண்ணக்கரு செயற்றிட்ட ஒப்புதலின் விரைந்த தீர்வை உறுதிப்படுத்துவதற்கும் விரைந்த செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலை மேற்கொள்வதற்கும் மேலும் மேம்படுத்தப்படவுள்ளது. மேலும், உள்ளார்ந்த வளம் மிக்க முதலீட்டாளர்கள் அவர்களின் உத்தேசிக்கப்பட்ட செயற்றிட்டங்களை அமைப்பதற்குப் பொருத்தமான காணியைக் கண்டுபிடிப்பதை வசதிப்படுத்தும் பொருட்டு முதலீட்டுச் சபை தன்னியக்கப்பட்ட காணி வங்கியை நிறுவியுள்ளது. இதை முதலீட்டுச் சபையின் இணையத்தளத்தினூடாக அணுக முடியும்.

**ஆடைத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான 5 ஆண்டு உபாயத் திட்டத்துடன் இணைந்து செல்லும் வகையில் ஆடைகள் கூட்டு சங்கங்களின் அரங்கம் செயற்பாடுகளை மேற்கொண்டது.** இவ் அரங்கம் அரசாங்கத்தின் தொடர்ச்சியான உதவியுடன் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரங்கங்கள் இரண்டிலும் நன்மதிப்பைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் பலவற்றை மேற்கொண்டது. கைத்தொழிலின் தொழிற்படையில் உள்ளார்ந்த வளம் மிக்க ஊழியர்கள் இணைவதை ஊக்கமளிப்பதற்கு வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் 'புலப்பாடு மற்றும் தொடர்ந்து வைத்திருத்தல்' என்ற தொனிப்பொருளிலான நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. உலக சந்தையில் 'குற்றங்களற்ற ஆடைகள்' என 'இலங்கையில் தயாரிக்கப்பட்டது' என்ற வர்த்தக அடையாளத்தை நிலைப்படுத்துவதற்கு இவ்வரங்கத்தின் முயற்சிகளை விதந்துரைக்கும் உலக சந்தைப் போக்குகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் பல முன்னணி ஆடைத் தயாரிப்பாளர்கள் உலகத் தரம் வாய்ந்த பசுமைத் தயாரிப்புப் பொறித்தொகுதிகளுக்கு அவர்களின் தொழிற்சாலைகளை மாற்றியமைத்தனர். உள்நாட்டு வாங்குநர்கள் உயர்தரமுடைய ஆடைகளைக் கொள்வனவு செய்வதை இயலச் செய்வதற்கும் உள்நாட்டுச் சந்தைக்கு அவர்களின் வரையறையற்ற நுழைவை இயலச் செய்யும் இறக்குமதிப் பிரதியீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்பதற்கு புடவை ஆலையாளர்களை ஊக்கப்படுத்துவதற்கும் இவ்வரங்கம் ஆடைகள் சந்தையின் ஒழுங்குவிதிகளைத் தளர்த்துவதற்கு முன்மொழிந்துள்ளது.

அட்டவணை 2.8

முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூபா.மில்லியன்) | | உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 (ஆ) | 2010 | 2011 (ஆ) | 2010 | 2011 (ஆ) |
| 1. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் | 146,456 | 187,594 | 172,283 | 224,364 | 15.0 | 16.4 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் | 41,236 | 43,777 | 46,965 | 50,037 | 12.2 | 12.5 |
| 3. மரம் மற்றும் மர உற்பத்திகள் | 3,205 | 3,371 | 3,642 | 3,751 | 12.0 | 10.1 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு மற்றும் அச்சுப்பதிப்பு | 10,273 | 13,927 | 11,742 | 15,900 | 12.5 | 12.4 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 83,398 | 99,026 | 98,563 | 117,901 | 15.4 | 16.0 |
| 6. உலோகமல்லலாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 53,621 | 66,341 | 62,161 | 77,063 | 13.7 | 13.9 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 5,042 | 5,558 | 5,864 | 6,459 | 14.0 | 14.0 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் | 32,356 | 30,775 | 37,578 | 34,879 | 13.9 | 11.8 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 6,411 | 5,231 | 7,335 | 5,992 | 12.6 | 12.7 |
| மொத்தம் | 381,998 | 455,599 | 446,133 | 536,347 | 14.4 | 15.1 |

(அ) கைத்தொழில் உற்பத்தி அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**கணிசமான வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் உள்ளார்ந்த வளத்தின் மூலம் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கு பல தரப்பட்ட அரச நிறுவனங்களுடாக அரசாங்கம் பல வழிமுறைகளை மேற்கொண்டது.** தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை இரத்தினக்கல் அகழ்வுச் செயற்பாடுகளில் பின்பற்றப்பட வேண்டிய பசுமை மற்றும் ஒழுக்கநெறி நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறைகளை எடுத்திருக்கையில் பெறுமதிகூட்டலை அதிகரிப்பதற்கு இரத்தினக்கல் பதிக்கப்பட்ட ஆபரணத்தை ஏற்றுமதி செய்வதற்கு கைத்தொழிலாளர்களை ஊக்கப்படுத்தியது. இவ்வதிகாரசபையின் விதந்துரைப்பின் அடிப்படையில் பெறுமதிகூட்டல் மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக வெளிநாடுகளிலிருந்து பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களைக் கொள்வனவு செய்வதற்காக ஐ.அ.டொலர் 50,000 கொண்ட முற்பணக் கொடுப்பனவுக்கு அரசாங்கம் ஒப்புதலளித்தது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு புத்தளம் மாவட்டத்தில் கைத்தொழில் வலயத்தை நிறுவுவதை ஆரம்பிப்பதன் மூலம் காலணி மற்றும் தோல் பதனிடல் கைத்தொழிலை தொடர்ந்து ஊக்கப்படுத்தியது. இந்தியாவின் காலணி வடிவமைப்பு நிறுவனத்தின் உதவியுடன் காலணி பயிற்சிப் பாடசாலையை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**வரவு செலவுத்திட்டம் 2012 இறை ஊக்குவிப்புகள் பலவற்றை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தொழிற்சாலைக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தது.** ஏற்றுமதிகளிலிருந்தான இலாபங்கள் மீதான கம்பனி வரி வீதம், 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டிருக்கையில் உள்நாட்டு ஆக்க உரிமைகளைப் பெற்றுக் கொண்ட 65 சதவீதத்தை விஞ்சிய உள்நாட்டு பெறுமதிகூட்டலுடனான ஏற்றுமதிகளுக்கு ஆண்டொன்றுக்கு 10 சதவீதம் கொண்ட மிகக் குறைந்த வீதத்தில் வரி விதிக்கப்படும். தயாரிக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்து ஆகக் குறைந்தது 90 சதவீத வருவாய்களைக் கொண்டுள்ள நிறுவனங்களின் வருமானம் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும். மேலதிக பதனிடல் மற்றும் உள்நாட்டு பெறுமதிகூட்டலுக்கான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ள இறப்பர், கனிப்பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்ட செஸ்வரி அதிகரிக்கப்பட்டது. இவ்விறை ஊக்குவிப்புக்கள் உள்நாட்டில் புதிதாக கண்டுபிடிப்பதை ஊக்குவிப்பதற்கும் அது போல் ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தொழிற்சாலைக் கைத்தொழில்களின் உள்நாட்டுப் பெறுமதிகூட்டலை அதிகரிப்பதற்குமான அரசாங்கத்தின் கொள்கையைப் பிரதிபலிக்கின்றன.

**வரவு செலவுத்திட்டம் 2012 உள்ளூரில் புதியனவற்றைக் கண்டுபிடித்தல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக மேலும் ஏற்பாடுகளை மேற்கொண்டது.** புதியவற்றைக் கண்டுபிடிப்பதை ஊக்குவிப்பதற்கு விரிவுரையாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆராய்ச்சிப்படி வழங்கப்பட்டது. ஆராய்ச்சி வருமானம் மீதான வருமான வரி 16 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டிருக்கையில் அரச நிறுவனங்களிலிருந்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளைப் பெறும் பொருட்டு தனியார் துறை நிறுவனங்களுக்கு ஏற்பட்ட செலவில் மூன்று குறைப்புக்கள் வரி செலுத்தத்தக்க வருமானத்திலிருந்து குறைக்கப்படவிருக்கிறது. ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்தில் ஈடுபட்டுள்ள அரச நிறுவனங்கள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கையில் வருமான வரி 20 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. தனியார் துறைக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான கூட்டு முயற்சியான இலங்கை தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அரச ஆராய்ச்சிச் செயற்பாட்டை வர்த்தகமயப்படுத்துவதில் தனியார் துறை பங்கேற்பை விரிவாக்குவதற்கு சாத்தியமான விருப்பத் தேர்வுகளை ஆராய்கிறது. இதனால், தேசிய கனிப்பொருள் மூலவளங்களைப் பயன்படுத்தி நனோ ரிற்றானியம் டயொக்சைட்டைத் தயாரிப்பதற்கு தனியார் துறை முதலீட்டாளருடன் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு தேசிய தொழில் முயற்சி

**அட்டவணை 2.9**

**முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழிலின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)**
**(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)**

| வகை | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 (ஆ) | 2010 | 2011 (ஆ) | 2010 | 2011 (ஆ) | 2010 | 2011 (ஆ) |
| 1. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் | 3.8 | 4.5 | 10.8 | 11.2 | 41.2 | 42.3 | 1.6 | 1.4 |
| 2. புடவைகள், அணியும், ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் | 5.4 | 6.1 | 15.6 | 16.8 | 14.1 | 15.3 | 2.8 | 2.4 |
| 3. மரம் மற்றும் மர உற்பத்திகள் | 10.5 | 11.1 | 17.2 | 18.1 | 34.0 | 34.5 | 3.8 | 3.2 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு மற்றும் அச்சுப்பதிப்பு | 5.1 | 6.5 | 13.6 | 14.2 | 20.7 | 22.7 | 3.2 | 2.8 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் | 7.3 | 8.1 | 14.3 | 14.7 | 32.3 | 33.2 | 3.0 | 2.5 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 21.6 | 26.5 | 15.9 | 16.2 | 31.0 | 32.5 | 3.0 | 2.3 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 10.6 | 11.2 | 11.4 | 12.5 | 36.8 | 38.5 | 1.9 | 1.6 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 5.8 | 7.1 | 13.0 | 13.5 | 29.2 | 32.1 | 3.4 | 2.9 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடாத தயாரிப்பு உற்பத்திகள் | 6.0 | 6.4 | 12.3 | 12.8 | 35.3 | 37.4 | 1.5 | 1.2 |
| மொத்தம் | 7.2 | 6.4 | 13.0 | 13.8 | 33.8 | 34.2 | 2.6 | 1.9 |

(அ) கைத்தொழில் உற்பத்தி அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஒருங்கிணைந்து ஆராய்ச்சிச் செயற்பாட்டை வர்த்தகமயப்படுத்துவதை வசதிப்படுத்துவதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியமொன்றை ஆரம்பித்தது.

**அரசாங்கம் பலதரப்பட்ட ஆதரவுப் பணிகள் மற்றும் ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்குவதன் மூலம் 2011இல் சிறிய நடுத்தர தொழில் முயற்சித் துறை அபிவிருத்தியை நோக்கிய அதன் கடப்பாட்டைக் காட்டியது.** தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் "கமற்ற ஒபின வியாபாரய" இன் முதலாவது பிரிவு வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் இரண்டாவது பிரிவு குருணாகல், கண்டி, மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டம் தெரிந்தெடுக்கப்பட்ட வியாபாரத்துக்கான பொருத்தமான தொழில் முயற்சியாளர்களை இனங்காண்பதுடன் பிரதேச செயலாளர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படுகிறது. இவ்வதிகாரசபையானது மொறட்டுவ மரக் கொத்தணி, விவல்தெனிய பிரம்புக் கொத்தணி மற்றும் மட்டக்களப்பு கைத்தறிக் கொத்தணி உள்ளிட்ட தெரிந்தெடுக்கப்பட்ட பிராந்தியங்களில் கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டுள்ளது. தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு 4 ஆண்டுகள் வரி விடுமுறை வழங்கப்பட்டிருக்கையில் ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களுக்கான மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களின் இறக்குதிகள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன. சிறிய, நடுத்தர தொழில்முயற்சித் துறை புதிய தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பெயரளவுக் கட்டணத்தில் அரச நிறுவனங்களிலிருந்து ஆராய்ச்சிப் பணிகளைப் பெறும்.

**இரத்தினக்கல் அகழ்தல் மற்றும் ஏனைய அகழ்தல் செயற்பாடுகளின் சிறந்த செயலாற்றத்துடன் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துறை 2011ஆம் ஆண்டில் 18.5 சதவீதத்தால் விரிவடைந்தது.** பெறுமதிகூட்டல் நியதிகளில் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துறையின் 75 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறும் ஏனைய சுரங்கமகழ்தல் துறையிலான பலமான செயலாற்றம் பெருந்தோட்டத் துறை வளமாக்கி உதவுதொகை விரிவுபடுத்தப்பட்டதன் மூலம் உயர் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கான அதிகரித்த பொசுபேற்று உற்பத்தி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கனிப்பொருள், மணல் மற்றும் கிறவைற்றின் சுரங்கமகழ்தலில் ஏற்பட்ட விரிவாக்கம் மற்றும் இவ்வாண்டில் கட்டடவாக்கச் செயற்பாடுகளில் ஏற்பட்ட செழிப்பு என்பவற்றால் உதவப்பட்டது. முக்கியமாக தாய்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து எழும் உயர் கேள்வியுடன் இரத்தினக்கல் அகழ்தல் செயற்பாடுகளும் 2010இன் 7.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2011இல் 17.4 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வளர்ச்சி இவ்வாண்டில் இரத்தினக்கல் ஏற்றுமதி அளவிலான உயர் வளர்ச்சியால் சான்றுபகரப்படுகிறது.

**பதனிடல் துணைத் துறை 2010இன் 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 0.9 சதவீதத்தால் மட்டுமே வளர்ச்சியடைந்தது.** இறப்பர் மற்றும் தெங்கு வெளியீட்டிலான குறைந்த வளர்ச்சியுடன் இணைந்து இவ்வாண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் தேயிலை உற்பத்தியிலான சிறிதளவு சுருக்கம் பதனிடும் துணைத் துறையிலான விரிவாக்கத்தை மட்டுப்படுத்தியது.

**குடிசைக் கைத்தொழில் துணைத் துறை முன்னைய ஆண்டின் 5.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்தால் விரிவடைந்தது.** குடிசைக் கைத்தொழில் துணைத் துறையிலான செழிப்பான வளர்ச்சி கட்டடவாக்கத் துறையிலான செழிப்பு மற்றும் சுய தொழில் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளால் ஏற்பட்டிருக்க முடியும். கட்டடவாக்கத் துறையிலான விரிவாக்கம் கட்டடப் பொருட்களின் சிறிய அளவிலான அனைத்து வகை உற்பத்தி மீதும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக மோதலால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைநிலை வழமையான நிலைக்குத் திரும்பியதால் மீள்குடியேற்றத்தின் பூர்த்தி மற்றும் பொருளாதாரச்

செயற்பாட்டிலான பொதுவான மேம்பாடு காரணமாக உயர் கேள்வியுடனான குடிசைக் கைத்தொழில் தோற்றம் பெற்று வருதலும் அவதானிக்கப்பட்டது.

**கைத்தொழில் கொத்தணியின் மின்வலு, வாயு மற்றும் நீர் துணைத் துறை 2010இன் 8 சதவீத வளர்ச்சி மற்றும் 2009இன் 3.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் சிறப்பாகச் செயலாற்றி 9.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இத்துறையின் விரைவுபடுத்தல் முக்கியமாக மின்வலு உருவாக்கத்தின் சிறப்பான செயலாற்றத்தால் உதவப்பட்டது. நீர் மின்வலு உருவாக்கத்திலான 18 சதவீத வீழ்ச்சி மற்றும் வெப்ப மின்வலு உருவாக்கத்திலான 35.8 சதவீத அதிகரிப்புடன் மின்வலு உருவாக்கத்திலான பெறுமதிகூட்டல் 9.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. புதிய நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் அமுலாக்கத்துடன் இவ்வாண்டில் நீர் துணைத் துறை 6.1 சதவீதத்தால் விரிவடைந்தது. வாயு துணைத் துறையின் பெறுமதிகூட்டல் 5.7 சதவீதத்தால் அதிகரித்தது.

**கட்டடவாக்கத் துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 9.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் உண்மை நியதிகளில் 14.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** கட்டடவாக்கத் துறையிலான வளர்ச்சித் தூண்டல் அரச துறை உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் வர்த்தக மற்றும் வதிவிட கட்டட நிர்மாணச் செயற்றிட்டங்கள் போன்ற கட்டடவாக்கச் செயற்பாடுகளிலான தனியார் துறை ஈடுபாட்டாலும் தூண்டப்பட்டது. கட்டடவாக்கத் துறைக்கு தனியார் துறையால் வழங்கப்பட்ட பங்களிப்பு கட்டடவாக்கச் செயற்பாடுகளுக்கான கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டது. குறிப்பாக துறைமுக அபிவிருத்தி, மின்வலு மற்றும் போக்குவரத்துத் துறைகளில் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட பாரிய செயற்றிட்டங்கள் என்பன அரச துறை கட்டடவாக்கச் செயற்பாடுகளிலான வளர்ச்சியை நோக்கிய ஆதரவுக் காரணிகளாகும். கட்டடவாக்கத் துறையிலான வளர்ச்சி சிமெந்து மற்றும் ஏனைய கட்டடவாக்கப் பொருட்களின் உயர் உற்பத்தி, இறக்குமதிகள் மற்றும் விற்பனைகளுடன் இணைந்து காணப்பட்டது. சிமெந்து உள்ளிட்ட உள்நாட்டு கட்டடவாக்கப் பொருட்களின் உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் முறையே 8.6 சதவீதத்தாலும் 21.2 சதவீதத்தாலும் அதிகரித்தன. கட்டடவாக்க பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் பிரசுரிக்கப்பட்ட விலைச் சுட்டெண்கள் இவ்வாண்டில் கட்டடச் செயற்பாடுகளின் விலைகள் விலை மட்டத்தில் ஏற்பட்ட பொது அதிகரிப்பைவிட குறைவான 5.4 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்ததை எடுத்துக்காட்டுகிறது.

## பணிகள்

**மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 59.5 சதவீதம் பங்களிக்கும் பொருளாதாரத்தின் பாரிய துறையாக விளங்கும் பணிகள் துறை 2011இல் 8.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** தொலைத் தொடர்பூட்டல், வீதிகள் மற்றும் போக்குவரத்து, மின்வலு போன்ற உட்கட்டமைப்புப் பணிகள்மற்றும் அதிகரிக்கும் வருமான மட்டம் என்பன பணிகள் துறையின் வளர்ச்சியைப் பேண உதவின. 2011இல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம், போக்குவரத்து, சுற்றுலாத் துறை, நிதியியல் பணிகள், துறைமுகப் பணிகள் மற்றும் தொடர்பூட்டல் போன்ற பணிகள் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தன.

**பணிகள் துறையினுள் பாரிய துறையான மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை துணைத் துறை முன்னைய ஆண்டின் 7.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** 2009இன் உலகளாவிய பொருளாதார அதிர்வுகளின் காரணமாக கடுமையான பின்னடைவுகளைக் கொண்டிருந்த இத்துணைத் துறை, 2010இல் பலமாக மீட்சியடைந்ததுடன், இப்போக்கானது, இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை ஆகிய அனைத்து மூன்று துணைத் துறைகளிலுமான ஆரோக்கியமான வளர்ச்சியுடன் 2011 இலும் தொடர்ந்தது.

**இறக்குமதி வர்த்தகத்தின் கூட்டப்பட்ட பெறுமதி 2010இன் 9.3 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக 2011இல் 14.3 சதவீதத்தினால் அதிகரித்தது.** அனைத்து மூன்று முக்கிய இறக்குமதி வகைகளான நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காண முடிந்தது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியின் அளவு 25.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் முறையே 23.3 சதவீதத்தினாலும் 28.2 சதவீதத்தினாலும் அதிகரித்தன. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் காணப்பட்ட உயர்ந்த வளர்ச்சி முக்கியமான கட்டடப் பொருட்கள், பொறிகள் மற்றும் கருவிகள் போன்ற உட்கட்டமைப்பு செயற்றிட்டத்துடன் தொடர்பானவையாக இருந்தன. இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி அளவில் ஏற்பட்ட வளர்ச்சி முக்கியமாக வளமாக்கி, பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் மூலப் பொருட்களின் காரணமாக ஏற்பட்டது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியிலான வளர்ச்சி; உந்து ஊர்திகள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள், பாற்பொருட்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் என்பனவற்றின் உந்துதலால் ஏற்பட்டது.

**ஏற்றுமதி வர்த்தகத் துணைத் துறை, முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 3.6 சதவீத வளர்ச்சிக்கெதிராக 10.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு கனிப்பொருள் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிலிருந்தும் புடவைகள் மற்றும் ஆடைகளை முக்கியமாக உள்ளடக்கிய கைத்தொழில் ஏற்றுமதிகளின் விரிவிலிருந்தும் கிடைத்த நன்மைகளே முக்கிய காரணங்களாகும்.** பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் திட்டம் + தீர்வைச் சலுகைகள் 2010 ஒகத்து முதற்கொண்டு அகற்றப்பட்ட போதும், புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வெளிநாட்டு வருவாய்கள் பெறுமதி நியதிகளில் 24.9 சதவீதத்தினால் அதிகரித்தன. கைத்தொழில் ஏற்றுமதி வகையினுள் முக்கிய

ஏற்றுமதியான புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகள் 13.5 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் அளவு 18.5 சதவீதத்தினால் அதிகரித்தன. வேளாண்மை ஏற்றுமதிகளின் அளவு 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இறப்பர் மற்றும் ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகளின் ஏற்றுமதி அளவுகள் குறைவடைந்தமையே காரணமாகும். இவ்வாண்டுப் பகுதியில் கனிப்பொருள் ஏற்றுமதி 10 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

**உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்பட்டு வர்த்தகப் படுத்தப்பட்ட பொருட்களின் வர்த்தகம் என வரைவிலக்கணம் செய்யப்படும் உள்நாட்டு வர்த்தகத் துணைத் துறை 7.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சியானது, மேம்பட்ட நுகர்வோர் கேள்வி, உயர்ந்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் 2011ஆம் ஆண்டுப் பகுதியில் நாட்டில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் சாதகமான பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள் என்பனவற்றினால் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் விரிவடைந்த வர்த்தக நடவடிக்கைகளும் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் விரிவடைய சாதகமான முறையில் பங்களித்தன.

**சுற்றுலா விடுதி மற்றும் உணவகங்கள் துணைத் துறையின் பெறுமதிகூட்டல் 2011இல் 26.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது.** 2011இல் சுற்றுலாப் பயணிகளின் வருகை 30.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகளில் வெளிநாட்டு விருந்தினர் தங்கும் இரவுகள் 21.4 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்து, சுற்றுலாக் கைத்தொழிலுக்கு பதிவு செய்யப்படாத சுற்றுலா விடுதிகள் மற்றும் விருந்தினர் இல்லங்கள் போன்றவற்றின் பங்களிப்பினை பிரதிபலித்தன. எனினும், பெரும்பாலான தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகள் இவ்வாண்டுப் பகுதியில் 70 சதவீதத்திற்கும் கூடுதலான உயர்ந்த தங்கல் வீதத்தினை பேணக் கூடியனவாக இருந்தன. மேலும் உள்ளூர் விருந்தினர் இரவுகளும் முன்னைய ஆண்டின் 24.5 சதவீத வளர்ச்சியினைத் தொடர்ந்து 2011இல் 9.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

**பணிகள் துறையின் இரண்டாவது பெரிய துணைத் துறையான போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத் துறை முன்னைய ஆண்டின் 11.9 சதவீத அதிகரிப்பைத் தொடர்ந்து 2011இல் 11.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இத்துணைத் துறை, பணிகளின் துறையில் இரண்டாவது பெரிய வளர்ச்சியைப் பெற்றமைக்கு போக்குவரத்து, சரக்குக் கையாளல், துறைமுகம், வான் போக்குவரத்து மற்றும் அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு ஆகிய அனைத்து மூன்று துணைத் துறைகளிலிருந்தும் கிடைத்த சாதகமான பங்களிப்பே காரணமாகும்.

**புகைவண்டி, பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்து துணைத் துறை 11.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியிலான இவ்வுயர்ந்த வளர்ச்சிக்கு அதிகரித்த வர்த்தக நடவடிக்கைகளும் சுற்றுலாவில் காணப்பட்ட வளர்ச்சியுமே காரணமாகும். போக்குவரத்து நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் இவ்வாண்டுப் பகுதியில் போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி, பெற்றோல் மற்றும் டீசல் விற்பனைகள், உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் மற்றும் வான் பயணங்களில் ஏற்பட்ட விரிவு என்பனவற்றினால் பிரதிபலிக்கப்பட்டது. இலங்கைப் புகைவண்டியினால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கி.மீற்றர் 4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், இலங்கை போக்குவரத்துச் சபையினாலும் தனியார் பேருந்து தொழிற்படுத்துநர்களாலும் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கி.மீற்றர்களும் இவ்வாண்டுப் பகுதியில் சிறிதளவில் மேம்பட்டன. சிறிலங்கன் மற்றும் மிகின் எயார்லையின்ஸ் என்பனவற்றினால் பறக்கப்பட்ட மொத்த கி.மீற்றர்கள் 2011இல் 14.8 சதவீதத்தினால் அதிகரித்தன.

அட்டவணை 2.10 கூட்டுக் கேள்வி

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ரூ.மில்) | | | நிலையான (2002) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010(அ) | 2011(ஆ) | 2009 | 2010(அ) | 2011(ஆ) |
| அ. உள்நாட்டுக் கேள்வி | | | | | | |
| நுகர்வு | 3,967,770 | 4,524,188 | 5,536,095 | 1,992,820 | 2,145,036 | 2,422,926 |
| (% மாற்றம்) | 4.4 | 14.0 | 22.4 | 3.6 | 7.6 | 13.0 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 1,181,449 | 1,545,500 | 1,958,833 | 671,191 | 768,341 | 827,480 |
| (% மாற்றம்) | -2.8 | 30.8 | 26.7 | 2.1 | 14.5 | 7.7 |
| மொத்த உள்நாட்டு கேள்வி | 5,149,219 | 6,069,688 | 7,494,928 | 2,664,011 | 2,913,377 | 3,250,405 |
| (% மாற்றம்) | 2.7 | 17.9 | 23.5 | 3.2 | 9.4 | 11.6 |
| ஆ. வெளிநாட்டுக் கேள்வி | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,031,289 | 1,254,021 | 1,508,565 | 665,575 | 723,880 | 803,507 |
| (% மாற்றம்) | -5.9 | 21.6 | 20.3 | -12.3 | 8.8 | 11.0 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,345,216 | 1,719,605 | 2,460,830 | 880,372 | 991,714 | 1,190,057 |
| (% மாற்றம்) | -20.8 | 27.8 | 43.1 | -9.6 | 12.6 | 20.0 |
| தேறிய வெளிநாட்டுக் கேள்வி | -313,927 | -465,584 | -952,265 | -214,797 | -267,835 | -386,551 |
| இ. மொத்த கேள்வி | 4,835,293 | 5,604,104 | 6,542,663 | 2,449,214 | 2,645,542 | 2,863,854 |
| (% மாற்றம்) | 9.6 | 15.9 | 16.7 | 3.5 | 8.0 | 8.3 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**துறைமுகங்களின் சரக்குக் கையாளல் மற்றும் வான் போக்குவரத்து துணைத் துறை முன்னைய ஆண்டின் 16.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2011இல் 7.2 சதவீதத்தினால் விரிவடைந்தது.** வளர்ச்சியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி, உலகளாவிய பொருளாதாரத்தில் காணப்பட்ட மெதுவான மீட்சியின் காரணமாக மாற்றிக் கப்பலேற்றலின் அளவுகள் மிதமாக விரிவடைந்தமையில் பிரதிபலிக்கப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் கொழும்பு துறைமுகம் 4.3 மில்லியன் இருபது அடிக்குச் சமமான கொள்கலன் அலகுகளை கையாள்வதில் 3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. கையாளப்பட்ட இருபது அடிக்குச் சமமான மொத்த கொள்கலன் அலகுகளில் உள்நாட்டு அளவு 12.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், மொத்தக் கையாளலில் மூன்றிலிரண்டு பங்கிற்கு மேல் வகைகூறும் மாற்றிக் கப்பலேற்றப்பட்ட அளவு 0.9 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தது.

**தொலைத் தொடர்பூட்டல் துறையில் பெறுமதிகூட்டல்கள் முன்னைய ஆண்டின் 13.2 சதவீத வளர்ச்சியினைத் தொடர்ந்து 2011இல் 13.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.** நிலையாகப் பொருத்தப்பட்ட மற்றும் செல்லிட இணைப்புக்களை உள்ளடக்கிய மொத்த குரல்வழி சந்தாதாரர் தளம் இவ்வாண்டில் 5.4 சதவீதத்தால் ஆண்டுக்காலப்பகுதியில் வளர்ச்சியடைந்தது. 2011 திசெம்பரில் உள்ளவாறு, தொலைபேசி அடர்த்தி (ஒவ்வொரு 100 ஆட்களுக்குமான தொலைபேசி இணைப்புக்கள்) நிலையாகப் பொருத்தப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் தொடர்பான 17.3 இனையும் செல்லிடத் தொலைபேசிகள் தொடர்பாக 87.8 இனையும் உள்ளடக்கி 105.1 ஆகக் காணப்பட்டது. தொலைத் தொடர்பூட்டல் துறையின் வளர்ச்சிக்கு செல்லிடத் தொலைபேசியின் பரந்த வலையமைப்பு, வாடிக்கையாளர் உதவுதொகைத் தளத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகரித்த வசதியும் கேள்வியும் உதவியாக அமைந்தன. 3ஆம் தலைமுறை அலைக் கற்றை பரந்த வலையமைப்பு வாடிக்கையாளர் தளம் 2011 இறுதியில் 0.5 மில்லியனுக்கு 142.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

**2011இல் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து துறை 7.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு, கிளை வலையமைப்பின் விரிவாக்கம், பணிகள் மற்றும் தனியார் துறைக் கொடுகடனின் உயர்ந்த வளர்ச்சிக்கு வழிவகுத்த சாதகமான பேரண்டப் பொருளாதாரச் சூழல் என்பன உதவியாக அமைந்தன. 2011இல் வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் இலாபம் அதிகரித்தது. இவ்வாண்டுப் பகுதியில் நிதியியல் நிறுவனங்களின் வட்டியை அடிப்படையாகக் கொண்ட மற்றும் கட்டணங்களை அடிப்படையாகக் கொண்ட நிதியியல் பணி நடவடிக்கைகள் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சி கண்டன. காப்புறுதித் துணைத் துறையின் செயலாற்றம் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்துடன் சேர்ந்து ஊர்திக் காப்புறுதிகள் உட்பட பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொண்டது.

**அரச பணிகள் துணைத் துறை 2011இல் 1.2 சதவீத வளர்ச்சியை மட்டும் பதிவு செய்தது.** இவ்வாண்டுப் பகுதியில் முக்கிய அரச துறை ஆட்சேர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரச பணிகளிலிருந்தான ஓய்வு பெறல்களும் அரச துறை பெறுமதிகூட்டல்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பங்களித்தன.

**தனியார் பணிகள் துணைத் துறை முன்னைய ஆண்டின் 5.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இத் துறையின் வளர்ச்சிக்கு விரிவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இவ்வாண்டில் நிலவிய தனியார் பணிகளில் முதலீடு செய்வதற்கான தூண்டுதலளிக்கும் சூழல் என்பன பெருமளவிற்குக் காரணங்களாக அமைந்திருந்தன.

## 2.3 செலவினம்

**தனியார் மற்றும் அரச துறைகளின் நுகர்வுத் தொகையினையும் முதலீட்டுச் செலவினங்களையும் உள்ளடக்கிய மொத்த உள்நாட்டுச் செலவினம் 2011இல் மேலும் விரிவடைந்தது.** மொத்த உள்நாட்டுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.7,495 பில்லியன்களென மதிப்பிடப்பட்டு 2010இனை விட 23.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. 2010 இற்கான கூட்டு உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட தொடர்பான அதிகரிப்பு 17.9 சதவீதமாகக் காணப்பட்டது. உறுதியான விலைமட்டங்களினால் ஊக்குவிக்கப்பட்ட தனியார் நுகர்வு, முதலீட்டினை ஊக்குவித்த தூண்டுதலளிக்கும் பேரண்டப் பொருளாதாரச் சூழலின் காரணமாக ஏற்பட்ட குறைந்த வட்டி என்பன மொத்த உள்நாட்டுச் செலவினம் உயர்ந்த விரிவாக்கத்திற்கு காரணமாயின. மொத்த உள்நாட்டுச் செலவினம் மற்றும் பொருட்கள் மற்றும் காரணியல்லா பணிகளின் தேறிய ஏற்றுமதிகளின் (ரூ.952 பில்லியன்) கூட்டுத் தொகையான நடைமுறைச் சந்தை விலைகளிலான மொ.உ.உற்பத்தி ரூ.6,543 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 16.7 சதவீதமான வளர்ச்சியைப் பிரதிபலித்தது.

### நுகர்வு

**2011இல் மொத்த நுகர்வுச் செலவினம் ரூ.5,536 பில்லியனுக்கு 22.4 சதவீதத்தினால் அதிகரித்தது.** இவ்வதிகரிப்பானது சராசரி விலைமட்டம் 8.3 சதவீதத்தினால் அதிகரித்தமையினதும் உண்மை நுகர்வு 13 சதவீதத்தினால் அதிகரித்தமையினதும் இணைந்த தாக்கமாகும். மொத்த நுகர்வில் தனியார் நுகர்வுச் செலவினம் 2010இன் 17.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 25.1 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு 2010இன் 65.2 சதவீதத்திலிருந்து 2011இல்

சிறப்புக்குறிப்பு 7

## நிதியியல் வசதிகளை வழங்குதல்

அனைத்து சமூக அங்கத்தவர்களும் தாங்கக்கூடிய ஒரு செலவில் முறைசார் துறை நிதியியல் சேவைகளினை உரிய காலத்தில் வழங்குவதனை உறுதிப்படுத்துவது நிதியியல் வசதிகளை வழங்குதல் என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. வறியவர்களால் நிதியியல் சாதனங்களை கையாள்வதற்கு, பொருளாதார வாய்ப்புக்களின் நன்மைகள், சொத்துக்களைக் கட்டியெழுப்புதல், இடர்களை முகாமை செய்தல் மற்றும் வெளியக அதிர்வுகளிற்கு அவர்களின் பாதிப்பைக் குறைத்தல் என்பவற்றைப் பெறுவதற்கு அவர்களை அனுமதிப்பதன் மூலம் அதிகாரமளிக்க முடியும். இதனால் நிதியியல் வசதிகளை வழங்குதல், பொருளாதார வினைத்திறன், சமூகத்தின் முழு நலன்புரி மற்றும் சமூக இணக்கம் என்பவற்றிற்கு சாதகமாக பங்களிக்கின்றது. அதன் விளைவாக, வசதிகளை வழங்கலின் வளர்ச்சி மற்றும் சமநிலையை உறுதிப்படுத்தலுக்கான ஒரு சாதனமாக தற்பொழுது காணப்படுகின்ற நிதியியல் வசதிகளை வழங்குதல் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக ஒரு கொள்கை முன்னுரிமையாக வந்துள்ளது. வங்கியியல் ஊடுருவல் வங்கியியல் பணிகளின் கிடைப்பனவு மற்றும் வங்கியியல் முறைமையினுடைய பாவனை என்பவற்றை நிதியியல் வசதிகளை வழங்கல் முறைமையொன்று உள்ளடக்குகிறது.

அபிவிருத்தியடைந்த நாடுகளும் நிதியியல் வசதிகள் வழங்கல் முறைமைகளை கட்டியெழுப்புவதறகான முயற்சிகளை எடுத்துள்ளன. குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ், ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தினுடைய சமூக மீள் முதலீட்டு சட்டமானது, வருமானம் குறைந்த சமூகங்களுக்கு கொடுகடன் கையாள்வதை விரிவாக்குவதற்கு தீர்மானித்தது. பிரான்சில், நிதியியல் வசதிகளை வழங்காமைக்கு எதிரான சட்டங்கள் இருக்கின்றன. ஐக்கிய இராச்சியத்தில் வங்கித்தொழிலை பெறும் வசதி, தாங்கக்கூடிய கொடுகடனைப் பெறும் வசதி மற்றும் இலவச நேருக்கு நேரான பண ஆலோசனையை பெறும் வசதி ஆகியவற்றில் நிதியியல் வசதிகள் வழங்குவதை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், நிதியியல் வசதிகளை வழங்குவதை ஊக்குவிப்பதில் அதிக நாடுகளில் வங்கியியல் துறைகளும் முன்னெடுப்புகளை எடுத்துள்ளன. சேர்மன் வங்கியாளர் அமைப்பினால் ஒவ்வொரு நபருக்கும் ஒரு வங்கிக் கணக்கு வழங்கல் என்ற அந்தவொரு முன்னெடுப்பு எடுக்கப்பட்டது. தென் ஆபிரிக்க வங்கியியல் அமைப்பு நிதியியல் வசதிகள் இல்லாதவர்களுக்கு குறைந்த செலவுடனான ஒரு சிறப்பு வங்கிக் கணக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்திய றிசேவ் வங்கியானது 2010 இலிருந்து மூன்று ஆண்டுகளுக்கான நிதியியல் வசதிகளை வழங்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட திட்டங்களிற்கு அனைத்துப் பொது மற்றும் தனியார் துறை வங்கிகள் கேட்கப்பட்டதற்கிணங்க நிதியியல் வசதிகளை வழங்குவதில் ஒரு வங்கி வழிப்படுத்திய மாதிரியை அறிமுகப்படுத்துவதற்கு புதிய முன்னெடுப்புக்களை எடுத்தது. மேலும், வங்கிகள் ஒன்றுமில்லாத அல்லது மிகக் குறைந்த நிலுவையுடன் கட்டுப்பாடுகளற்ற கணக்குகளை திறப்பதற்கு மற்றும் சிறிய மேலதிகப் பற்றுக்களுடன் அந்தக் கணக்குகளை வழங்கக்கூடாதென ஆலோசனையளிக்கப்படுகின்றது.

வங்கியியல்/ நிதியியல் வசதி இல்லாமைக்கான ஏழு முக்கிய காரணங்களை இக்கட்டுரை காட்டுகின்றது. சில வேளைகளில் ஐயக் கடனின் ஒரு வரலாற்றைக் கொண்டிராதவர்களும் கூட இன்னொரு வங்கிக்குச் செல்லுமாறு "ஆலோசனையிடப்படுவதை" ஆய்வுகள் கண்டுபிடித்துள்ளன "(வசதிகளை வழங்க மறுத்தல்)". குறிப்பாக, வறியவர்கள், வீடற்றவர்கள் மற்றும் அகதிகளுக்காக கணக்கொன்றைத் திறப்பதற்கு வங்கிகளினுடைய அடையாளம் காணப்பட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் கடினமாக இருக்கின்றது ("வசதிகள் வழங்க மறுப்பதை அடையாளம் காணல்"). கணக்கொன்றைத் திறப்பதற்கு தேவைப்படுகின்ற ஆகக் குறைந்த நிலுவை போன்ற வங்கிகளினுடைய நியதிகளும் நிபந்தனைகளும் மக்கள் கணக்குகளைத் திறப்பதைத் தடுத்தல் அல்லது சில வேளைகளில் அடிக்கடி பயன்படுத்தப்படாமை அல்லது முன்கூட்டியே மேற்கொள்ளப்படும் மீளப் பெறுகைகள் வங்கிக் கணக்குகளை மூடச் செய்கின்றன ("வசதிகளை வழங்க மறுக்கும் நிபந்தனைகள்"). சில நாடுகளில், வங்கி அறவீடுகளின் மட்டம் உயர்வாக இருப்பதுடன் இது வங்கிக் கணக்குகளைத் திறக்கும் குறைந்த வருமானம் ஈட்டுவோரைத் தடுக்கிறது ("வசதிகள் வழங்க மறுப்பதன் விலைகள்"). குறிப்பாக சிறிய கிராமிய சமுதாயங்களில் ஒரு வங்கிக் கிளைக்கான பௌதீக அணுகலின் கிடைப்பனவின்மை காரணமாக மக்கள் வங்கியிடப்படாதவர்களாக வருகின்றனர் ("வசதிகளை வழங்க மறுப்பதன் அணுகல்"). வறிய அல்லது நடுத்தர வருமானம் பெறுகின்ற நாடுகளில், வங்கியியல் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வைத்திருக்காததற்கான ஒரு முக்கிய காரணமாக நிதியியல் நிபுணத்துவத்தினுடைய பற்றாக்குறை இருக்க முடியும் ("வசதிகளை வழங்க மறுக்கும் அறியாமை"). குறைந்த வருமானமுடைய பிரிவினர் அவர்களுடைய தேவைகள் வங்கிகளுடன் பொருத்தப்பாடின்மையாக விளங்குவதாக நினைப்பதால் இது வங்கித்தொழில் பணிகள் பாவிக்கப்படாமைக்கும் இட்டுச் செல்கின்ற ("வசதிகளைத் தானாகவே மறுத்தல்") மனோதத்துவ அல்லது சிலவேளைகளில் கலாச்சாரத் தடைகளை ஏற்படுத்துகின்றது.

பிணைகளின் பற்றாக்குறை அல்லது உத்தரவாளர்களை வழங்குவதற்கான இயலாமையானது வங்கிக் கொடுகடனைத் தேடுகின்ற பொழுது வறியவர்களால் எதிர்நோக்கப்படுகின்ற மிகப் பெரிய பிரச்சனைகளில் ஒன்றாகும். சிறு அளவிலான கடன்கள், தவணைக் கொடுப்பனவு மற்றும் சிறியளவிலான மீள்கொடுப்பனவு, அவர்களின் காசுப்பாய்ச்சலுக்கு ஒத்தவையாக இருத்தல் என்பன அவர்களிற்குத் தேவைப்படுகின்றது. இந்தப் பிரச்சனைகளை நுண்பாக நிதி வெற்றிகரமாக தெளிவுபடுத்துகின்றது.

இதனால், நிதியியல் வசதிகள் வழங்குவதை ஊக்குவிப்பதற்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாக நுண்பாக நிதிக் கொடுகடன் விளங்குகின்றது. நிதியியல் வசதிகள் வழங்குவதை ஊக்குவிப்பதற்கு ஏனைய நவீன கொள்கைகளானது முகவர் வங்கித்தொழில் அல்லது "கிளையில்லா வங்கித்தொழில்", நடமாடும் வங்கித்தொழில், அரச வங்கிகளை சீர்திருத்தல், உயிரியல் மருத்துவ புத்தாக்க முறைகளைப் பயன்படுத்தி நிதியியல் இனங்காணலை வழங்குதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கையில், நிதியியல் வசதிகள் வழங்குவதை ஊக்குவிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மேல் மாகாணத்திற்கு வெளியில் வங்கிக் கிளைகளை தாபிப்பதற்கு வங்கிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. மேல் மாகாணத்தில் ஒரு கிளையை திறக்கும் பொழுது மேல் மாகாணத்திற்கு வெளியில் இரு கிளைகளை திறக்குமாறு வங்கிகள் வேண்டப்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், வங்கிக் கிளைகள் மற்றும் விரிவாக்க அலுவலகங்களின் எண்ணிக்கை 2006இல் 183 இலிருந்து 2011இல் 407 இற்கு இரண்டு மடங்குகளிற்கும் மேலாக அதிகரித்தது. மேலும், பிரதேசங்களில் ஒவ்வொரு நகர மத்தியஸ்தானம் மற்றும் சிறிய நகரங்களில் தாபிக்கப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறிகளினூடாக தொழில்நுட்பத்தினூடான வசதிகள் குறிப்பிடத்தக்களவு ஊக்குவிக்கப்பட்டன. கடந்த 5 வருடங்களில் நாட்டில் தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் இரட்டிப்பாகியுள்ளன. வடக்கு, கிழக்கில் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் எண்ணிக்கை 2006இல் 49 உடன் ஒப்பிடுகையில் 2011இல் 219 ஆகவிருந்தது. அதேவேளை, 2006 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளிற்கிணங்க, 2009 இறுதியளவில் வேளாண்மைத் துறைக்கான கொடுகடன்

2

தேசிய உற்பத்தியும் செலவினமும்

சொத்துப்பட்டியலின் 10 சதவீதக் கடன் வழங்கலைப் பூர்த்தி செய்வதற்கான கட்டாயத் தேவைப்பாடாக அனைத்துப் உரிமம் பெற்ற வங்கிகளும் வேண்டப்பட்டன. தவறுகின்ற வங்கிகள் நிலுவையை வேளாண்மைத் துறைக்கு மீள் கடன் வழங்கலிற்கு இலங்கை மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படுகின்ற ஒரு நிதிக்கு கிடைக்கத்தக்கதாக செய்யப்படும்.

1970 களிலிருந்து இலங்கை மத்திய வங்கியானது பல்வேறு சலுகையிலான கொடுகடன் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் நிதியியல் வசதிகள் வழங்குவதை ஊக்குவிப்பதில் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றது. இலங்கை மத்திய வங்கி 1980 களில் கிராமிய துறையில் ஒரு விரிந்த கிளை வலையமைப்புடன் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளை தாபித்தது. இலங்கை மத்திய வங்கி மீள்நிதியிடல் மற்றும் கொடுகடன் உத்தரவாதம் வழங்குவதன் மூலம் நுண்பாக நிதி மற்றும் ஏனைய கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களை தொழிற்படுத்துவதற்கு வங்கிகளிற்கு உதவுகின்றது. தற்பொழுது, அதேபோன்ற 21 கொடுகடன் திட்டங்கள் இருக்கின்றன. மேலும், இலங்கை மத்திய வங்கி “வசதி வழங்காமையின் அறியாமை” யைக் குறைப்பதற்கு நாடு பூராகவும் நிதியியல் நிபுணத்துவத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. 2011இல் வங்கித்தொழில் துறை வெளிப்படைத்தன்மை மற்றும் போட்டித்தன்மையை அதிகரிப்பதனூடாக “வசதிகளை வழங்க மறுக்கும் நிபந்தனை”, “வசதிகளை வழங்க மறுப்பதன் விலை” மற்றும் ஒரு குறிப்பிட்டளவிற்கு “வசதிகளைத் தானாகவே மறுத்தல்” என்பவற்றைத் தடுக்கின்ற வாடிக்கையாளரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை மத்திய வங்கி “நடத்தைக் கோவை” ஒன்றைப் பின்பற்றுமாறு உரிமம் பெற்ற அனைத்து வங்கிகளுக்கும் பணிப்புரையொன்றை வழங்கியது.

இலங்கையில் நிதியியல் வசதிகளை வழங்குவதை மேலும், முன்னேற்றுவதற்கான இடைவெளி காணப்படுகிறது. குறிப்பாக, செலவு செயல் விளைவு மற்றும் கொடுகடன் வழங்கலிலான பிரச்சனைகளை தெளிவுபடுத்துவதற்கு வினைத்திறன் மிக்க விதத்தில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும்.

**உசாத்துணை**


1. ADBI, Tokyo. (2009) Promoting Financial Inclusion through Innovative Policies.

   http://www.adbi.org/event/2878.financial.inclusion.innovative.policies/

2. Bernanke, Ben S. (2007) The Community Reinvestment Act: Its Evolution and New Challenges. Community Affairs Research Conference, Washington, DC.

   http://www.federalreserve.gov/newsevents/speech/Bernanke20070330a.htm

3. Chakrabarty, K.C. Financial Inclusion/A road India needs to travel.

   http://www.livemint.com/2011/09/

4. Financial Inclusion Taxk Force. (2010) Mainstreaming Financial Inclusion: Managing money and access to banking. March.

   http://webarchive.nationalarchieves.gov.uk/+/

   http:/www.htm-treasury.gov.uk

5. Kempson, E. (2006) Policy level response to financial exclusion in developed economies: lessons for developing countries. University of Bristol, Paper for Access to Finance, World Bank, Washington DC.

6. Sarma, M. (2010) Index of Financial Inclusion. Jawaharlal Nehru University, India


69.8 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. அரசின் நுகர்வுச் செலவினம் 2010இன் 2.5 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2011இல் 10.9 சதவீதத்திற்கு உயர்வடைந்ததெனினும், மொ.உ.உற்பத்தியில் அரச நுகர்வின் பங்கு 2011இல் 15.6 சதவீதத்திலிருந்து 14.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து தனியார் துறை நுகர்வில் காணப்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பின் தாக்கத்தினை பிரதிபலித்தது.

**தனியார் நுகர்வுச் செலவினத்தில், முன்னைய ஆண்டினைப் போன்றே உயர்ந்தளவு செலவினம், உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகளின் மீதே காணப்பட்டது.** உணவு மற்றும் வெறியமல்லாக் குடிபானங்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு 2010இல் நிலவிய 39.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் 37.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உணவிற்கான கேள்வி உறுதியாகக் காணப்பட்டமையினால், வருமான மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே செலவினப் பங்கில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தது. ஆடைகளின் மீதான செலவினப் பங்கு மேம்பாடடைந்து 7 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது. அதேவேளை, ஆடை மற்றும் காலணிப் பொருட்கள் மீதான செலவினம் முன்னைய ஆண்டிலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தது. உண்மையான குடியிருப்பாளர் வருமானம் குறிப்பிடத்தக்க தொகையினால் அதிகரிக்கும் பொழுது, உணவல்லாப் பொருட்களின் மீதான செலவினம் கணிசமானளவிற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள்கள் மீதான தனியார் செலவினம் 2010இன் 9.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதத்தினால் அதிகரித்தது.** இவ்வகையின் உயர்ந்த வளர்ச்சிக்கு திரவ பெற்றோலிய வாயு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் மின்வலுத் தீர்வையின் மேல் நோக்கிய திருத்தங்களும் பெருமளவிற்குக் காரணங்களாக இருந்தன. 2011இல் எரிபொருட்களின் விலைகளும் பல தடவைகள் சீராக்கம் செய்யப்பட்டன.

**கடந்த சில ஆண்டுகளாக குடியிருப்பாளர் வருமானம் தொடர்ச்சியாக அதிகரித்தமையின் காரணமாக தளபாடங்கள், வீட்டுப் பொருட்கள் மற்றும் வழமையான பேணல் நடவடிக்கைகள் போன்றன மீதான செலவினம் பெயரளவு நியதிகளில் உயர்ந்த வீதத்தில் அதிகரித்திருக்கின்றது.** எனினும், இந்நுகர்வு வகையின் செலவிடல் பங்கு 2010இன் 5.2 சதவீதத்திலிருந்து 2011இல் 4.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் நிலவிய சார்பு ரீதியான தாழ்ந்த பணவீக்கத்தை பரிசீலனைக்கு

அட்டவணை 2.11 நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு

| விடயம் | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு (%) | | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010(அ) | 2011(ஆ) | 10/09 | 11/10 |
| 1. உணவு, குடிபாணங்கள் மற்றும் புகையிலை | 38.2 | 39.6 | 37.8 | 21.5 | 19.3 |
| 2. புடவையும், காலணியும் | 5.6 | 6.0 | 6.8 | 25.0 | 42.9 |
| 3. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 12.0 | 11.2 | 10.3 | 9.6 | 14.7 |
| 4. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வீட்டின் தொடர்ச்சியான பராமரிப்பு | 5.9 | 5.2 | 4.6 | 2.9 | 11.3 |
| 5. நலம் | 2.2 | 2.0 | 1.8 | 6.9 | 10.4 |
| 6. போக்குவரத்து | 21.1 | 21.2 | 23.1 | 17.8 | 36.2 |
| 7. ஓய்வு, களியாட்டமும் பொழுதுபோக்கும் | 2.9 | 2.5 | 2.8 | 1.3 | 38.6 |
| 8. கல்வி | 0.1 | 0.1 | 0.1 | 11.2 | 26.1 |
| 9. உணவகங்களும் விடுதிகளும் | 1.5 | 1.3 | 1.5 | 3.7 | 43.4 |
| 10. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 5.5 | 4.8 | 4.4 | 2.0 | 14.5 |
| 11. வெளிநாட்டு வதியுள்ளோர் செலவு | 8.1 | 9.2 | 9.6 | 34.3 | 30.2 |
| 12. கழிக்குக: வதிவற்றோர் செலவு | 3.1 | 3.2 | 2.8 | 20.8 | 8.6 |
| மொத்த தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 17.2 | 25.1 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

எடுத்துக்கொள்கையில் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி வீட்டுப் பாவனைக் கருவி மற்றும் பணிகளில் ஏற்பட்ட உண்மையான வளர்ச்சியாலும் ஏற்பட்டிருக்க முடியும்.

**பெயரளவு நியதிகளில் ஒட்டுமொத்த தனியார் நுகர்வு செலவினத்திலும் பார்க்க குறைந்த வீதத்தில் காணப்பட்ட போதும் இவ்வாண்டுப் பகுதியில், நலப் பணிகள் மீதான செலவினம் தொடர்ந்தும் விரிவடைந்தது.** அதேவேளை, கல்வி மீதான தனியார் நுகர்வுச் செலவினம், பெயரளவு நியதிகளில் உயர்ந்த வீதத்தில் உயர்வடைந்து, 2010 உடன் ஒப்பிடுகையில் விரைவான வேகத்தினைக் காட்டியது. இந்த 26.1 சதவீத வளர்ச்சியின் பின்னரும் கூட கல்வித் துறை 0.1 சதவீதமான மிகச் சிறிய பங்கொன்றினை மாத்திரமே பதிவு செய்தது. கல்வி மீதான தனியார் செலவிடலின் பங்கு ஒப்பீட்டு ரீதியில் மிகச் சிறியதாக இருப்பதற்கு இலவசக் கல்வியை வழங்குகின்ற அரச துறையின் குறிப்பிடத்தக்க வகிபாகமே காரணமாக இருக்கமுடியும்.

**இரண்டாவது மிக உயர்ந்த பங்கிற்கு வகைகூறும் போக்குவரத்துத் துறை மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2011இல் 36.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இதன்படி, இது தொடர்பான பங்கும் ஏறத்தாழ 1.9 சதவீதப் புள்ளியினால் 23.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. போக்குவரத்தின் மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட இவ்வளர்ச்சிக்கு இவ்வாண்டுப் பகுதியில் பேருந்துக் கட்டணங்கள் மற்றும் போக்குவரத்துடன் தொடர்பான மற்றைய செலவுகளின் அதிகரிப்பிற்கு வழிவகுத்த பெற்றோல் மற்றும் டீசலின் மேல் நோக்கிய விலைத் திருத்தங்களே முக்கிய காரணமாகும்.

**2011இல் அரச துறைக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவுதொகைகள் மற்றும் மாற்றல்களின் விரிவாக்கம் காரணமாக அரச நுகர்வுச் செலவினம் அதிகரித்தது.** அரச துறை கூலிச் செலவுகள் மற்றும் உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு அரச நுகர்வுச் செலவினம் அதிகரிக்க முக்கியமாகப் பங்களித்தது. இவ்வாண்டுப் பகுதியில் அரச நுகர்வுச் செலவினம் பெயரளவு நியதிகளில், முன்னைய ஆண்டின் 2.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க குறைந்த வளர்ச்சியை விட 10.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

## முதலீடு

**2011ஆம் ஆண்டுப் பகுதியில் பெயரளவு நியதிகளில் மொத்த முதலீட்டுச் செலவினம் 26.7 சதவீதத்தினால் அதிகரித்தது.** 2011இல் மொத்த முதலீட்டுச் செலவினம் (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) முன்னைய ஆண்டின் ரூ.1,545 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,959 பில்லியனாக மதிப்பிடப்பட்டது. உண்மையான நியதிகளில் முதலீட்டுச் செலவினம் 7.7 சதவீதத்திற்கு உயர்வடைந்தவிடத்து 2010இன் தொடர்பான வளர்ச்சி 2009இன் தாழ்ந்த தளத்தில் 14.5 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடு, 2010இன் 27.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 29.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டது. முதலீட்டு நடவடிக்கைகளின் அதிகரித்த மட்டம் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியிலும் கட்டடவாக்கத் துறையின் ஆரோக்கியமான வளர்ச்சியிலும் பிரதிபலிக்கப்பட்டது. முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி குறைந்த வட்டி வீதங்கள், தூண்டுதலளிக்கும் முதலீட்டுச் சூழல் மற்றும் மேம்பட்டு வரும் பேரண்டப் பொருளாதார சூழல் என்பனவற்றின் உதவியுடன் தனியார் துறையினால் வழிநடத்தப்பட்டது.

**தனியார் முதலீட்டுச் செலவினம் மொத்த முதலீட்டுச் செலவினத்தில் 79 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2011இல் 29 சதவீதத்தினால் விரிவடைந்தது.** தனியார் துறை முதலீடு/ மொ.உ.உற்பத்தி விகிதம் 2010இன் 21.4 சதவீதத்திலிருந்து

**அட்டவணை 2.12 இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்**

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழிலாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 (அ) | 2011 (ஆ) | 2010 (அ) | | | 2011 (ஆ) | | | 2010 (அ) | 2011 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| அனுமதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 437 | 174 | 87,417 | 143,049 | 230,466 | 351,880 | 142,952 | 494,832 | 56,828 | 46,242 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 363 | 153 | 82,866 | 142,733 | 225,599 | 349,475 | 141,816 | 491,291 | 55,087 | 45,707 |
| பிரிவு 16இன் கீழ் | 74 | 21 | 4,551 | 316 | 4,867 | 2,406 | 1,136 | 3,541 | 1,741 | 535 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்டசெயற்றிட்டங்கள் (இ) | 269 | 161 | 55,318 | 82,494 | 137,812 | 238,489 | 132,894 | 371,383 | 34,827 | 42,715 |
| பிரிவு 17இன் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ) | 1,991 | 2,019 | 533,312 | 327,766 | 861,078 | 657,686 | 374,926 | 1,032,613 | 426,084 | 450,913 |
| வர்த்தகத் தொழிற்பாடுகள் (ஈ) | 2,688 | 2,673 | 272,456 | 3,932,128 | 4,204,584 | 267,987 | 3,940,372 | 4,208,360 | 399,906 | 402,300 |
| பிரிவு 17இன் கீழ் (இ) (ஈ) | 1,886 | 1,902 | 252,296 | 3,921,611 | 4,173,907 | 248,566 | 3,930,285 | 4,178,851 | 361,183 | 365,271 |
| பிரிவு 16இன் கீழ் (ஈ) | 802 | 771 | 20,159 | 10,517 | 30,676 | 19,421 | 10,087 | 29,508 | 38,723 | 37,029 |
| கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (ஈ) | 1,940 | 2,006 | - | 145,295 | 145,295 | - | 150,268 | 150,268 | 294,242 | 299,902 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை

மூலங்கள் : இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

2011இல் 23.7 சதவீதத்திற்கு தொடர்ச்சியாக அதிகரித்தது. அரச முதலீடு/ மொ.உ.உற்பத்தி விகிதமும் சிறிதளவால் அதிகரித்தது.

**2011இல் வெளிநாட்டு நேரடி முதலீடு ஐ.அ.டொலர் 1,066 மில்லியனுக்கு 107 சதவீதத்தினால் அதிகரித்தது.** பாரிய வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சலில் சுற்றுலா விடுதி மற்றும் சுற்றுலா துணைத் துறைக்கான பாய்ச்சல் பாரியதாக இருந்ததுடன் அதனைத் தொடர்ந்து உட்கட்டமைப்புத் துறை முக்கியமாக தொலைபேசி மற்றும் தொடர்பூட்டல் மற்றும் எரிபொருள், வாயு மற்றும் பெற்றோலியத் துறைகளுக்கான பாய்ச்சல்கள் காணப்பட்டன. தயாரிப்புத் துறையில் வெளிநாட்டு முதலீடுகளுள் முக்கியமாக புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள்; இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள்; மற்றும் உருவமைக்கப்பட்ட உலோகங்கள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் துணைத் துறைகளினால் கவர்ந்து கொள்ளப்பட்டன. தயாரிப்புத் துறைக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் குறிப்பிடத்தக்கதொரு தொகை தற்பொழுது நடைமுறைப்படுத்தலுக்காக எதிர்பார்த்திருக்கும் இலங்கை உருக்கு கூட்டுத்தாபனத்தினை மீள்எழுச்சிப்படுத்துவதற்காக பெறப்பட்டது. முலீட்டுச் சபையினால் அடையப்பட்ட திரண்ட முதலீடு 2011 இறுதியில் ரூ. 1,003 பில்லியனாக விளங்கியது.

**முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் 2011ஆம் ஆண்டுப் பகுதியில் மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகள் ரூ.495 பில்லியன்களாகக் காணப்பட்டது.** இது ரூ.230 பில்லியனாகக் காணப்பட்ட முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 115 சதவீதத்திற்கும் கூடுதலானதொரு அதிகரிப்பாகக் காணப்பட்டது. தயாரிப்பு துணைத் துறையின் முதலீட்டில் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்தி வகையும் பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி வகையும் கணிசமான கூறொன்றிற்குப் பங்களித்தது.

2011ஆம் ஆண்டில் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட செயற்றிட்டங்களிடையே உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் வகை மதிப்பிடப்பட்ட மூலதனத்தில் பெரும் பங்கிற்கு வகைகூறியது. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகை 2011இல் தொழிற்பாடுகளைத் தொடங்கிய செயற்றிட்டங்களிடையே பாரிய பங்களிப்பாளராக காணப்பட்டது.

**வரைபடம் 2.5 ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்கள் (விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக)**







(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

**அட்டவணை 2.13 நடைமுறை சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

| விடயம் | சதவீதப் பங்கு % | | சதவீத வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2010(அ) | 2011(ஆ) | 2010(அ) | 2011(ஆ) |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 76.5 | 72.7 | 15.9 | 16.7 |
| பொருட்கள் பணிகளினது இறக்குமதிகள் | 23.5 | 27.3 | 27.8 | 43.1 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **18.5** | **22.9** |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 61.8 | 61.5 | 14.0 | 22.4 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 19.8 | 19.7 | 26.5 | 22.1 |
| தனியார் | 15.4 | 15.6 | 34.5 | 24.3 |
| அரசு | 4.4 | 4.1 | 4.9 | 14.3 |
| இருப்புக்களின் மாற்றம் | 1.3 | 2.1 | 174.9 | 99.3 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 17.1 | 16.8 | 21.6 | 20.3 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **18.5** | **22.9** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**அரச முதலீட்டுச் செலவினம் 2011இல் ரூ.409 பில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் இது பெயரளவு நியதிகளில் 2010இனை விட 18.7 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகக் காணப்பட்டது.** அரச முதலீடுகள் முக்கியமாக வீதிகள், நெடுஞ்சாலைகள், புகைவண்டிப் பாதைகள் மற்றும் போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல்கள், துறைமுகங்கள் மற்றும் வானூர்தி நிலையங்கள், நீர் மின்வலு, நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் செயற்றிட்டங்கள் ஆகிய துறைகளிலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மீது கவனத்தினைச் செலுத்தின.

## மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

**2011இல் பொருளாதாரத்தில் உள்நாட்டு மூலவளங்களையும் மற்றும் வெளிநாட்டு மூலவளங்களையும் (பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகள்) உள்ளடக்கிய மொத்த மூலவளங்களின் கிடைப்பனவு நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.9,003 பில்லியனுக்கு 22.9 சதவீதத்தினால் அதிகரித்தது.** ரூ.1,680 பில்லியன் கொண்ட அதிகரிப்பு, உள்நாட்டு மூலவளங்களில் ஏற்பட்ட ரூ.939 பில்லியன் கொண்ட அதிகரிப்பினையும் வெளிநாட்டு மூலவளங்களின் இறக்குமதியில் ஏற்பட்ட ரூ.741 பில்லியன் கொண்ட அதிகரிப்பினையும் கொண்டிருந்தது. இதன்படி, கிடைக்கத்தக்க மொத்த மூலவளங்களில் உள்நாட்டு மூலவளங்களின் பங்கு 2010இன் 76.5 சதவீதத்திலிருந்து 72.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், எஞ்சிய 27.3 சதவீதம் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைத்தது. உண்மை நியதிகளில் மூலவளங்களின் கிடைப்பனவு 11.5 சதவீதமாக விளங்கி முன்னைய ஆண்டின் 9.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியிலும் பார்க்க உயர்வானதாகக் காணப்பட்டது. இது 8.3 சதவீதத்தினால் அதிகரித்த உள்நாட்டு மூலவளங்களின் உண்மையான வளர்ச்சியையும் 20 சதவீதத்தினால் அதிகரித்த பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் அதிகரிப்பினையும் உள்ளடக்குகிறது.

**கிடைக்கத்தக்க மூலவளங்கள் நுகர்வு, நிலையான மூலதன ஆக்கம் மற்றும் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகள் என்பன மீது பயன்படுத்தப்பட்டன.** 2011இல் நுகர்வு மூலவளங்களில் 61.5 சதவீதத்தினை ஈர்த்துக் கொண்டதன் மூலம் 22.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியை பிரதிபலித்த வேளையில் நிலையான மூலதன உருவாக்கம் 19.7 சதவீதத்தினை ஈர்த்துக் கொண்டதன் காரணமாக 22.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியை (2010இல் 26.5 சதவீதம்) எடுத்துக்காட்டியது. பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகள் 20.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் அதன் தொடர்பான பங்குகள் 16.8 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன.

**நடைமுறைச் சந்தை விலைகளில், பொருளாதாரத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த மூலவளங்களில் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட பங்கு 72.7 சதவீதமாகவும் எஞ்சிய 27.3 சதவீதம் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் காணப்பட்டது.** உள்நாட்டுப் பொருள் நிரம்பலின் விஞ்சிய செயலாற்றத்தினைக் கொண்ட மொத்த நிரம்பலில் உள்நாட்டுப் பணிகளின் பெறுமதி 42.1 சதவீதத்தினைக் கொண்டுள்ளவிடத்து பணிகள் துறையில் கூட்டப்பட்ட பெறுமதி பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவில் பங்களித்தது. 2011இல் இறக்குமதி செலவினத்தில் ஏற்பட்ட விரைந்த விரிவாக்கத்தின் காரணமாக பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த நிரம்பலில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினதும் பணிகளினதும் பங்கு 2010இல் 23.5 சதவீதத்திலிருந்து 27.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**வரைபடம் 2.6 2011இன் பொருளாதாரம் (நடைமுறைச் சந்தை விலைகளின்)**

பொருட்கள் மற்றும் பணிகளின் நிரம்பல்
(ரூ. 9,003 பில்லியன்)




பொருட்கள் பணிகளுக்கான கேள்வி
(ரூ. 9,003 பில்லியன்)



அட்டவணை 2.14 நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள்

| விடயம் | ரூ.மில்லியன் | | (%) மாற்றம் | | மொ.உ.உ.வின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2010(அ) | 2011(ஆ) | 2010(அ) | 2011(ஆ) | 2010(அ) | 2011(ஆ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 5,604,104 | 6,542,663 | 15.9 | 16.7 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 4,524,188 | 5,536,095 | 14.0 | 22.4 | 80.7 | 84.6 |
| தனியார் | 3,651,578 | 4,568,393 | 17.2 | 25.1 | 65.2 | 69.8 |
| அரசு | 872,610 | 967,702 | 2.5 | 10.9 | 15.6 | 14.8 |
| 3. முதலீடு | 1,545,500 | 1,958,833 | 30.8 | 26.7 | 27.6 | 29.9 |
| தனியார் | 1,200,795 | 1,549,611 | 39.1 | 29.0 | 21.4 | 23.7 |
| அரசு | 344,704 | 409,222 | 8.4 | 18.7 | 6.2 | 6.3 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 1,079,916 | 1,006,568 | 24.5 | -6.8 | 19.3 | 15.4 |
| தனியார் | 1,199,731 | 1,078,424 | 14.5 | -10.1 | 21.4 | 16.5 |
| அரசு | -119,815 | -71,856 | 33.4 | 40.0 | -2.1 | -1.1 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -465,584 | -952,265 | -48.3 | -104.5 | -8.3 | -14.6 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -69,776 | -72,046 | 25.1 | -3.3 | -1.2 | -1.1 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 413,885 | 513,216 | 23.0 | 24.0 | 7.4 | 7.8 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 1,424,024 | 1,447,738 | 24.0 | 1.7 | 25.4 | 22.1 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## சேமிப்புக்கள்

**2011இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.1,007 பில்லியன்கள் என மதிப்பிடப்பட்டன. இது முன்னைய ஆண்டினை விட 6.8 சதவீதம் கொண்டதொரு சுருக்கமாகும்.** உள்நாட்டுச் சேமிப்புக்கள் தேய்வடைந்தமைக்கு, நுகர்வில் ஏற்பட்ட விரிவும் ஏற்றுமதி வருவாய்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமைக்கிடையிலும் அதிகரித்த இறக்குமதி வளர்ச்சியின் விளைவாக தேறிய வெளிநாட்டுக் கேள்வி தேய்வடைந்தமையே காரணங்களாகும். மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்களில், அரச அரசிறை மற்றும் மீண்டெழும் செலவினத்திலான மிகையாக அல்லது அரச வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு மிகையாக (அரச சேமிப்புக்கள்) வரைவிலக்கணம் செய்யப்படுகின்ற அரச சேமிப்புக்கள் 2011இல் மேம்பாடடைந்தன. அரசாங்கத்தின் குறைச் சேமிப்புக்கள் 2010இன் மொ.உ.ற்பத்தியின் 2.1 சதவீதத்திலிருந்து 2011இல் 1.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள், தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் என்பனவற்றின் கூட்டுத்தொகையான தேசிய சேமிப்புக்கள் 2011இல் ரூ.1,448 பில்லியன்களென மதிப்பிடப்பட்டதுடன் இவை முன்னைய ஆண்டினை விட 1.7 சதவீதம் கொண்ட மேம்பாட்டினைக் காட்டின.** வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் வழமை போன்று எதிர்க்கணியமாக இருந்த போதும் அது 2011இல் 3.3 சதவீதத்தினால் மேலும் தேய்வடைந்தது. வெளிநாட்டுப் பெறுகைகள் மற்றும் காரணிக் கொடுப்பனவு இரண்டும் 2011இல் அதிகரித்த போதும், பின்னைய, ஒப்பீட்டு ரீதியில் கூடுதலாக உயர்வடைந்து வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தில் தேய்வினை ஏற்படுத்தியது. தொழிலாளர் பணவனுப்பல்களை முக்கியமாக உள்ளடக்கிய தேறிய தனியார் மாற்றல்கள் 2011இல் 24 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீதத்தில் வளர்ச்சியடைந்தன. தேறிய தனியார் மாற்றல்களில் ஏற்பட்ட முன்னேற்றம் இவ்வாண்டுப் பகுதியில் உள்நாட்டுச் சேமிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மாறாக, தேசிய சேமிப்புக்களில் சாதகமான வளர்ச்சியொன்று பதிவு செய்யப்பட உதவின. எனினும், வெளிநாட்டு தனியார் மாற்றல்களில் காணப்பட்ட அதிகரிப்பு 2011இல் நுகர்வில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவின் தாக்கத்தினை எதிரீடு செய்யப் போதுமானதாக இருக்கவில்லை. எனவே, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2010இன் 25.4 சதவீதத்திலிருந்து 2011இல் 22.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இதன்படி, மொ.உ.உறபத்தியின் விகிதமாக தேசிய சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டுக்கிடையிலான வேறுபாடான மூலதன மூலவள இடைவெளி, உள்நாட்டுச் சேமிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் முதலீட்டு விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் 2.2 சதவீதத்திலிருந்து 7.8 சதவீதத்திற்கு கணிசமான அளவில் அதிகரித்தது.